
www.tamilarangam.net

# தூண்டில்




*TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 26*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'மார்க்ஸிஸம் வேண்டாம்' என்ற தலைப்பு. மார்க்ஸிஸம் சம்பந்தமான கேள்விகள் மட்டும் இடம்பெறும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தி நிற்பதால், அதைப் பொது வான பயனுள்ள கேள்விகளின் களமாக மாற்றுமாறு பல வாசகர்கள் தெரிவித்த ஆலோசனையின் பேரில் 'கேள்வி — பதில்' பகுதியாக இதை மாற்றியுள்ளோம்.

சமூகப் பயனுள்ள கேள்விகளோ, அவற்றின் பதில்களோ மார்க்ஸிஸத்திற்கு முரணற்றவை எனும்போது அப்படி முத்திரை பொறித்துத்தான் கூறவேண்டும் என்பதில் அவசியமில்லைத்தான்.

எனவே கேட்கும் கேள்விகளும் பயனுள்ளவைகளாக இருப்பது வாசகர்களிடமே உள்ளது. ஒருவர் எத்தனை கேள்விகளை வேண்டுமானாலும் எழுதியனுப்பலாம்.

— கடலோடிகள்

? இன்று நடைபெறும் அரசியல் மாற்றங்கள், விமர்சனங்கள், மதிலுடைப்புகளின் பின்பும் உங்களுக்கு ஏன் சார் மாக்ஸியம்?

— யோகமுத்து

! நன்றி நண்பரே தங்கள்யோசனைக்கு. ஆற்றுநீர் எதிர்த்து போனதை அறிந்திருக்கிறீர்களா? குப்பைகளும், அடைசல்களும் கூட அவ்வாறே வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்படும்.

சோவியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனவிலும், ஜேர்மெனிகளுக்கிடையிலான மதில் தொடர்பாகவும் ஏற்பட்ட பிரச்சினைகள் எல்லாமே ஏன் நாளைய வளர்ச்சிக்கு ஒரு புதிய வடிவம் தரும் நடவடிக்கைகளாக அமையக் கூடாதென்றே, விமர்சனத்திற்கு வழிசமைக்காதென்றோ கூறமுடியாது.

அவ்வாறு இல்லாமல் இருந்தாற்கூட பின்தள்ளும் நடவடிக்கையையும் இவற்றால் பெரிதாக

## பதில்கள்: பரதேசி

சமூகமும், மனித வரலாறும் ஒருபோதுமே பின் நோக்கி போக முடியாது. அப்படிப்போவதுமில்லை. நாளுக்கு நாள் விஞ்ஞானம் மனித வளர்ச்சிக்கு உதவியபடியே இருக்கிறது.

செய்துவிட முடியாதென்பதில் அசையாத நம்பிக்கை எமக்குண்டு

? இமிக்கிரேசன் பற்றிய பெருமை பேச்சு மட்டத்திலிருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு கேள்வி பதில்

து வீரகேசரியில் கட்டுரைகளாகவும் வருகிறதே. இது பற்றி?

— ஆனந்தராசன்

! எந்த சம்பந்தமும் இல்லாமல் மிக் குறைவான அறிமுகமேயுள்ள ஒருவர் என்னைச் சந்தித்தபோது, "அண்ண உங்களின்ர வீட்டுக்கு வரவேணும், வரவேணும் எண்டு நினைக்கிறது. எங்க நேரமிருக்கு? இவங்கள் இமிக்கிறன்ற் தந்ததால நல்ல வேலசெய்ய வேண்டியிருக்கு" என்றார்.

இப்படித் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்பவர்கள் இமிக்கிறன்ற் கிடைத்த எல்லா நகரங்களிலும் ஒன்றிரண்டிருந்தபோதும்...

நாட்டோடு எதுவித ஒட்டுறவும் இல்லாமல் உன்னுடைய உடல் உழைப்பை விற்கும் வரை நீ இங்கு தங்குவதற்கு இடம்தரலாம். உடலுழைப்பை வழங்கிக்கொண்டிருக்கும்போதே இடம் மறுக்கப்படுவதற்கும் எமக்கு எந்த நிமிடமும் உரிமையுண்டு என்ற பொருளடக்கம் மிக்கதுதான் சிலர் பெருமையடித்துக் கொள்ளும் 'இமிக்கிரேசன்'.

? கலாச்சாரப் புரட்சி என்றால் எத்தகைய நடவடிக்கைகளை உள்ளடக்கியது எனக் கூற முடியுமா?

— அ. குமார்

! நில உடைமையாளர்களால் தலைமை தாங்கப்படும் அரசு இருக்குமாயின் கல்வி, கலைவடிவங்கள், சூழல் பற்றி அறிவு போன்ற யாவுமே அந்த அரசமைப்பைப் பேணுவதற்கே சேவகம் செய்யும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதுபோலவே தொழிலதிபர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசமைப்பின் போது இந்த மேல் அமைப்புகள் யாவும் இதனைப் பேணும் கருத்துகளையே கொண்டிருக்கும்.

சோசலிஸ சமூகமும் அவ்வாறே. எந்த அடி அமைப்புகளிலும் அதற்கேற்றவாறே சட்டங்களும், ஒழுங்குவிதிகளும் உருவாக்கப்படுகின்றன.

சட்டம் தவிர்ந்த ஏனையவைகள் மீதும் ஒவ்வொரு அமைப்பும் செலுத்தும் ஆதிக்கத்தை மாற்றி மற்றைய முன்னேறிய அமைப்புக்குச் சாதகமாக்குவதே கலாச்சாரப் புரட்சியாகும்.

இதனை ஸ்தாபன வடிவத்தினூடாக கூடுதல் கவனமெடுத்து ஆற்றும் பணியும், அவாவும் சோசலிஸ சமூகத்திலேயே இருக்கும்.

உதாரணமாக முதலாளித்துவ அரசின் கல்வியமைப்பைப்- பார்ப்போம்.

கலப்படம் சம்பந்தமான மனப்பாங்கு அல்லது சிந்தனை மாணவரிடம் வளர வாய்ப்புண்டல்லவா?

எனவே இவ்வாறான கல்வி மாற்றப்படலில் உள்ள அவசியமே கலைவடிவங்கள், சூழல் பற்றிய அறிவு எல்லாவற்றிலும் உள்ளது.

நான்கு கிலோ நல்ல தேயிலை கிலோ 8 ரூபாவாகவும், பத்து கிலோ தரமற்ற தேயிலை கிலோ 2 ரூபாவாகவும் வாங்கி 18 கிலோவையும் 6 ரூபாவாக விற்ருல் எவ்வளவு இலாபம் கிடைக்கும் என்ற கணித்தல் சம்பந்தமான அந்தக்கேள்வியில் இருப்பது கணிதவிடை மட்டுமா? இல்லை.



"வெளிநாட்டிலதானே பிள்ளையள் எண்டு சொல்லி இயக்கம் இருக்கிறதையெல்லாம் பறிச்சுக்கொண்டு போட்டுது. நீங்கள்தான் எப்பிடியெண்டாலும் மீட்டுத் தரவேணும்"

"அரசாங்கத்தோட சேந்திருக்கிற இயக்கமெண்டால் இதுக்கு நாங்கள் ஒரு நடவடிக்கையும் எடுக்கேலாது"

— இன்னன்று

www.tamilarangam.net

# பேரம் பேசலில்...

## வைகை வளவன்

எங்கள் வீட்டின் முன்புறம்
அழகிய தோட்டம்
ரோசாக் கன்றுகள்
நிற நிறப் பூக்கள்
காற்றில் ஆடி அசையும்போது
எத்தனை இன்பம்—ஓர்நாள்
கனகம் மாமியின்
ராஜியும், இன்பமும்
ஆசையால் பறித்தனர்
சிவப்பு மலரினை—அன்று தொடக்கம்
அவர்களும் நாங்களும்
பரம விரோதிகள்
அவர்களோடு நாம்
கதைத்தலே பாவம்—இது
அண்ணர் போட்ட
கட்டளை எமக்கு

அண்ணர் சொல்வதை
யாருமே தள்ளார்—காரணம்
அத்தனை வீரம்
விடுதலைப் போரில்
பெரும் படைக்கவரே
உள்ளூர் தளபதி
மக்களைக் காக்கும்
பணியில் இருப்பதால்
அடிக்கடி அறிக்கையில்
வேண்டுகோள் விடுப்பார்

www.tamilarangam.net

ஒருநாள் காலையில்
சிங்கள இராணுவம்
சுற்றி வளைத்து முற்றுகையிட்டு
தேடுதல் வேட்டையில்
தீவிரம் கொண்டது
வேலிகள், மதில்கள்
வீட்டுச் சுவர்களை
வீழ்த்தியபடியே
ராங்கிகள் உருண்டது.

அண்ணரும் அவர்தம் படையும்
தங்கியிருந்த எங்கள் வீட்டு
ரோசா செடிகளை சிதைத்த ராங்கிகள்

வீட்டுச் சுவரில் மோதியபோது
மூண்டது பெரும்போர்
சிலமணி நேரம்—அதன் பின்விளைவு
பிள்ளையை இழந்து
கதறிய அன்னைகள்
அன்னையை இழந்து
அழுதிடும் பாலகர்கள்
கை கால் இழந்து
கதறிய பேர்கள்
தம்மையே இழந்து
தவித்த மங்கையர்
அத்தனை பேரும்
அகதி முகாமில்
உப்புக் கஞ்சியை
உணவாய்க் கொள்ள
வரிசையாய் நிற்கிறோம்
எனக்கு முன்னே
ராஜியும், இன்பமும்.
கனகம் மாமியைக் காணவேயில்லை.
இப்போ கூட
கதைப்பதா விடுவதா?

ஓசையும், தீயும் புகைமண்டலமும்
ஓய்ந்த மறுநாள்
உதயன், முரசு, ஈழநாட்டினில்
வந்தது செய்தி.

www.tamilarangam.net

இருபது ஆமி களத்தினில்
மாண்டார்.
இன்னும் சிலரோ
மருத்துவம னையில்.
ராங்கிகள், கெலிகள்
நெருப்பில் எரிந்தன.

எங்களில் எவரும் இறந்திடவில் லை
வெற்றிகரமாய் வெளியே வந்தோம்

அடுத்த புறமாய் திரும்பிப் பார்த்தால்
அரச அறிக்கை அச்சாயுள்ளது.
அறுபத்தியாறு பயங்கரவாதிகள்
செத்தனர்—மீதி
நாற்பது பேர்கள் சரணடைந்தார்கள்
த லைவரும் சிலரும் ஓடினர் தப்பி.

அகதி முகாமொன்றுள்ளது பற்றி
யாருமே அறிக்கையில் சொல்லவேயில் லை.
அவரும், இவரும் வெற்றி என்றனர்.
இருவர் தரப்பும் இழப்பில் லை என்றது.
மக்க ளைப் பற்றியும், இழப்பைப் பற்றியும்
எவர்க்கும் அக்கறை இல் லையா இங்கு?

சிந்திய குருதி
உலர்ந்திடும் முன்னம்
வீழ்ந்த உடல்கள்
புதைபடும் முன்னம்
அண்ணரும் சிலரும்
அவசரமாக
சென்றனர் தெற்கே
சமரசம் செய்ய.
ரோசாத் தோட்டமே
சிதைந்தபின் கூட
சிதைத்தவன் கோட்டையுள்
நண்பராய் போகிறார்.

பூவைப் பறித்த ராஜியும், இன்பமும்
இருக்கிறார்—நாங்கள்
கதைப்பதே இல் லை.

www.tamilarangam.net

# பகடைக்காய்கள்

இலங்கை–இந்திய 'நட்புறவு' ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு இரண்டு அரசுகளும் தங்கள் நலன் சார்ந்து இழுபறியட்டுக் கொண்டிருக்கும் அதேநேரம் கிழக்கில் புதிய நிலைமைகள் – தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வடக்கு–கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பை இலங்கை அரசு ஒத்திப் போட்டதும், இந்த வாக்கெடுப்புக்கு சம்மதிக்கப் போவதில்லையென எல்.ரி.ரி.ஈ தெரிவித்திருப்பதும்– பத்திரிகைகளில் வெளியாகிய பின், கிழக்கில் முஸ்லீம் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளில் எல்.ரி.ரி.ஈ தீவிரமாக இறங்கியுள்ளது.

'ஜிகாத்' என்ற ஆயுதபாணி முஸ்லீம்கள் இயக்கத்தைக்–கலைப்பதாகவும், அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதாகவும் கூறிக்கொள்ளும் எல்.ரி.ரி.ஈ முஸ்லீம் வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று ஆட்களைக் கடத்திச் செல்வதுடன் அவர்களில் பலரைக் கொலை செய்துள்ளது. அத்துடன் எந்த முஸ்லீமும் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதென எச்சரித்துள்ளது.

கிழக்கு மாகாணம் எப்போதுமே இலங்கை அரசாலும் இயக்கங்களாலும் பகடைக்காயாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது இப் பகுதியில் சிறுபான்மையினரின் விகிதாசாரத்தைக் குறைக்க இலங்கை அரசால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்று சொல்லிக் கொள்ளப்படும் வடக்கும், கிழக்கும் இணைவதைத் தடுக்க கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையே காலத்துக்கு காலம் கலவரங்கள் தூண்டப்பட்டு அவர்கள் பிளவுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

இந்திய இராணுவம் இப் பகுதிகளில் நிலைகொண்டிருந்தபோது இந்திய அரசின் தூண்டுதலுடன் ஈ.என்.டி.எல்.எவ்வினால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லீம் மக்களின் மக்களின் வயல்கள் பறிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து கப்பம் வசூலிக்கப்பட்டது. ரி.என்.ஏ உருவாக்கப்பட்டதும் முஸ்லீம் மக்களைக் கொலை செய்வதில் அவர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ், டெலோ, ஈ.என்.டி.எல்.எவ், புளொட் ஆகிய இயக்கங்களினால் இந்த ரி.என்.ஏ அமைக்கப்பட்டது

இவை தவிர அவ்வப்போது அரசாங்கத்தின் தூண்டுதலினால் சில முஸ்லீம்களும் தமிழர்களைக் கடத்தியும், கொலை செய்தும் கலவரங்களைத் தூண்டி வந்தனர்.

இவற்றின் தொடர்ச்சியாக இப்போது முஸ்லீம் மக்களுக்கெதிரான எல்.ரி.ரி.ஈ.யின் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.

வடக்கு-கிழக்கு இணைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் முஸ்லீம்களின் இந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளும்பொருட்டு இலங்கையரசு எல்.ரி.ரி.ஈ.யின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகிறது.

கிழக்கில் சில பகுதிகளில் எல்.ரி.ரி.ஈ 'ஊரடங்குச்சட்டம்' பிறப்பித்து, பகிரங்கமாக பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சந்தைப் பகுதிகளிலிருந்து ஆட்களைக் கடத்திச் சென்றபோதும், பலரைக் கொலை செய்தபோதும் இலங்கையரசும், அதன் கூலிப்படைகளும் வாளாதிருந்தன.

சிறுபான்மையினரைப் பிளவுபடுத்தி, அவர்களின் பலத்தை குறைப்பதற்கும், வடக்கு-கிழக்கு இணைப்பைத் தடுப்பதற்கும், முஸ்லீம்களிடையேயும் ஆயுதபாணி இயக்கங்களைத் தோற்றுவித்து புதிய பூசல்களை உருவாக்கவும் இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு தமிழ் 'விடுதலை' இயக்கங்களே தமது நலன்களை முதன்மைப்படுத்தி ஆதரவளித்து வருகின்றன.

பாகிஸ்தான் அரசிடமிருந்து ஆயுத, நிதி உதவிகளைப் - பெற்றுக்கொண்டதாகக் கூறப்பட்ட 'ஜிகாத்' இயக்கம் முதலில் சிறியளவிலேயே இருந்தாலும், தற்போதைய எதிர் நடவடிக்டிககளினால் முஸ்லீம் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று மேலும் வளர்ச்சியடைவதுடன், தமிழ் இயக்கங்களின் இம்மாதிரியான முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறை நடவடிக்கைகளினால் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமையும் உள்ளது இது எல்லா விதத்திலும் இலங்கையரசுக்குச் சாதகாமாக இருப்பதுடன் தமிழ், முஸ்லீம் மக்களுக்குப் பாதகமானதாகவே அமையும்.

ஏற்கெனவே எல்.ரி.ரி.ஈ.யின் கொலை மிரட்டலால் பெரும்பாலான வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். சிலர் எல். ரி. ரி. ஈ. யினால் — கொல்லப்பட்டுள்ளனர்.

ஈரோஸ் எம். பி. களும் எல். ரி. ரி. ஈ. யின் பயமுறுத்தலையடுத்து தமது பதவிகளை ராஜினாமா செய்து வருகின்றனர். இந்த நிலையில் வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளில் முஸ்லீம்களே பெரும்பான்மை வகிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இதையும் ஏற்றுக்கொள்ள முடியாததாலேயே 'ஜிகாத்' இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்று கூறிக்கொண்டு, முஸ்லீம் மக்களை இப்போது பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லீம் காங்கிரசையும் எல். ரி. ரி. ஈ. மிரட்டி வருகிறது.

இந்த நிலையில் முஸ்லீம் மக்கள் இலங்கை அரசின் கபடத்தனத்தையும், இயக்கங்களின் வர்க்க நலன்களையும் இனம் கண்டு அவர்களின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமல் செயற்படவில்லையாயின் அரசியல் சூதாட்டப் பகடைகக்காய்களாகப் பயன்படுத்தப்படும் நிலைமைகளே தொடர்ந்து கொண்டிருக்கும்.

---



"மாகாணசபையைக் கலைச்சுப் போட்டு மாகாணசபைத் தேர்தலை வைக்கச்சொல்லி நீங்கள் சொல்லுற மாதிரிதான் உங்கட பிள்ளையும்".

"ஏன் வாத்தியார் அப்பிடிச் சொல்லுறியள்?"

"பின்ன என்ன? நான் ரண்டும் ரண்டும் நாலெண்ணிறன். உங்கட மகன் சொல்லுறான் சீ அது பிழை. ரண்டும் ரண்டும் நாலெண்டு".

— இன்னொரு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலப்பெயர்வும், இலக்கியச் சந்திப்பும்.

புலம் பெயர்ந்த படைப்பாளிகள்

80களில் இருந்து இங்கு வாழ்ந்துவரும் தமிழர்கள் தங்கள் சஞ்சிகைகள் மூலமும் சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் மூலமும் அவர்களுக்கென்றொரு புகலிட இலக்கியத்தை தங்கள் இலக்கிய வரலாற்றில் நிறுவி வருகிறார்கள்.

இவர்களது ஆக்கங்கள் எங்கள் மக்களால் அதிகம் அறியப்படாமலே இருந்து வருகின்றன. இன்று இங்கு வாழும் தமிழ் படைப்பாளிகளின் வாழ்வியல் நிபந்தனைகள் அன்று நாஸிகளின் ஆட்சியில் புலம் பெயர்ந்தஎமது எழுத்தாளர்கள் தாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் அனுபவித்த வாழ்வியல் நிபந்தனைகளையே நினைவு கூருகின்றன.

எமது மொழியில் புகலிட இலக்கியம் என்ற வார்த்தை சொல்லப்படுகின்ற போதெல்லாம் 1933இலிருந்து இந்நாட்டைவிட்டு விலக வேண்டியிருந்த பல எழுத்தாளர்களை எம்முன் கொண்டுவரும்.

கிட்லரின் அதிகாரக் கைப்பற்றலுக்குப் பின் எம் மாணவர்கள் மத்தியில் ஜேர்மெனியர் அல்லாதோர் மீதான இனவெறியூட்டல் 1933 மே மாதத்தில் நடாத்தப்பட்ட பகிரங்க நூல்கள் எரிப்பு எனும் நிகழ்வுடன் உச்ச நிலையை அடைந்தது. அன்றமட்டும் சுமார் 20,000புத்தகங்கள் பேர்லினில் ஒப்பிறன்-பிளற்ஸ் என்ற இடத்தில் இனவெறியூட்டப்பட்ட மாணவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

## கெல்முட் றிக்ரர்

இந் நிகழ்வின் பின்னரும், ஏனைய கொடுமைகளினாலும் எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள், இசைஞர்கள், கலைஞர்கள் என்று சுமார் ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமானோர் ஜேர்மெனியைவிட்டு ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்தனர்.

தொலைபேசி எச்சரிக்கைகள் கூட இவர்களை நாட்டைவிட்டுத் துரத்தியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படித் தப்பி வந்தவர்களுக்குப் பல அயல் நாடுகள் தற்காலிகப் பாதுகாப்பையேவழங்கின.

1934இல்சார்லாண்ட் ஜேர்மெனியின் கைக்கு மாறியதுடன் இங்கு புகலிடம் கோரியவர்களுக்கு பாதுகாப்பு கேள்விக்குரியதாகிவிட்டது.

அகதிகளுக்கு விசா தேவையென டென்மார்க் வலியுறுத்தியது. அத்துடன் ஆகக் கூடியது 3 மாத விசா மட்டுமே அவர்களுக்கு வழங்கியது.

1936-1938இல் ரஷ்யாவில் புகலிடம் தேடிய ஜேர்மெனிய அகதிகளில் பெரும்பாலானோர் சிறையிலடைக்கப்பட்டனர்.

செக்கோசெலவாக்கியாவில் பிரத்தியேக வாய்ப்பு வழங்கப்பட்ட போதும் 1938இல் அந்நாடு கைப்பற்றப்பட்டதுடன் அங்குள்ள நிலைமையும் மாறியது

அதே ஆண்டு ஒல்லாந்து தமது நாட்டுக்குள் அகதிகள் வருகையைத் தடைசெய்தது.

அவ்வாறே சுவிற்சலாந்தும் 1942இல் தனது எல்லைகள் முற்று முழுதாக மூடப்படும்வரை அகதிகளுக்குத் தடைவிதித்தது.

1940களில் அகதிகள் அதிகம் தங்கியிருந்த இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்ஸ் போன்றநாடுகள் அவர்களை ஜேர்மெனிக்குத் திருப்பியனுப்புவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வந்தன.

பிரான்சில் கெஸ்ராப்போ எனப்படுகின்ற ஜேர்மென் அரசினது உளவுப்படை நேரடியாக இந்த அகதிகளைக் கண்காணித்து வந்தது.

கிட்லரின் ஆட்சி தற்காலிகமானதல்ல என்று தெரிந்தபின் தமது புகலிட வாழ்வை நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு இந்த நாடுகளில் வாழ்ந்துவந்த அகதிகள் இந் நாடுகளின் மேற்படி நடவடிக்கைகளினால் துன்புறுத்தப்பட்டனர்.

இந்தவேளையில் எந்த ஒரு ஐரோப்பிய நாடும் இவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கவில்லை. எனவே இவர்கள் பாலஸ்தீனம், அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு எந்தவிதமான 'தஸ்தாவேஜு' பிரச்சினைகளை எதிர்நோக்காதும், நிபந்தனைகளற்றும் தமது வாழ்வை காப்பாற்றிக் கொண்டார்கள்.

1940களில் புகலிடம் தேடிய பெரும்பாலான ஜேர்மென் அகதிகள் தமது புலப்பெயர்வில் மூன்று, நான்கு நாடுகளில் வாழ்ந்தவர்களாகவேஇருந்தார்கள். தஞ்சம் கோரிய அதிகமானோர் தாம் தப்ப முடிந்த நாடுகளிலேயே தம் வாழ்வை முடித்துக் கொண்டார்கள்.

சுமார் 2,000 எழுத்தாளர்களுக்கு தமது வாழ்வைக்

www.tamilarangam.net

காப்பாற்றுவது, புலம் பெயர்வது சுலபமாயிருக்கவில்லை. தாங்கள் புகலிடம் கோரிய இடங்களில் வாழ்ந்த தங்கள் நாட்டு மக்களிடையே இலக்கிய ஆர்வமின்மை இருந்தும், பணப் பிரச்சினையை எதிர்நோக்கி இருந்தும் கூட சில அச்சகங்களை நிறுவியும், நூல்களை, தினசரிகளைவெளியிட்டும் இலக்கிய சேவை செய்தார்கள்.

உதாரணமாக பிராக்கிலும், இலண்டனிலும் இலக்கியத்திற்கும், விமர்சனத்திற்குமான 'நொயன் டொச்சன் பிளற்ற' என்ற மாத சஞ்சிகை, பரிசில் 'தஸ் நொய ராக புக்', 'பரிச ராக பிளற்' போன்றவையும், மொஸ்கோவில் இலக்கிய மாத சஞ்சிகையான 'தஸ் வேட்', மெக்சிக்கோவில் 'பிறயர் - டொச்லாண்ட்' என்பனவையும்வெளிக் கொணரப்பட்டன. ஆனாலும் இவற்றின் பிரதிகள் சொற்பளவிலேயே வாசிக்கப்பட்டன.

எனினும் இந்தப் படைப்பாளிகளின் ஆத்மாவை உயிரோடு தக்கவைக்க இவர்களது எழுத்துகளும், இச் சிறு பத்திரிகைகளும்தான் ஒரே ஒரு சாதனமாய் அமைந்தன.

பலர் தாம் புகலிடம் தேடிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்டு அந்நியராகவும், அதேவேளை தம் சொந்த நாடு சேர்ந்த பின்னரும் அந்த வாழ்க்கையையே வாழ்ந்து முடித்தார்கள்.

இங்கு வேதனை என்னவென்றால் இவர்களது அக்கால புகலிட அநுபவங்கள் இன்று மறக்கப்பட்டவையாக, மறைக்கப்பட்டவையாக மாறியிருப்பதேயாகும்.

அன்று ஜேர்மென் படைப்பாளிகளுக்கு ஏற்பட்ட நிலைமை இன்று தமிழ் ஆக்கதாரர்களுக்கு ஏற்படுகின்ற நிலைமைகளிலிருந்து பெருமளவில் வேறுபட்டதல்ல.

விடுதிகளில் (?) வாழ்க்கை, உறுதியற்ற தங்கு அநுமதி, வேலைக்கும், படிப்புக்குமான தடைகள், தஸ்தாவேஜுகளுக்கும், பத்திரங்களுக்குமாய் வாழ்க்கையைப் பறித்துவிட்ட அரச அலுவலகங்களின் கெடுபிடிகள், மொழி பிரச்சினை, தனிமையுணர்வு, தமது ஆக்கங்களை வெளியிடுவதற்கான சாத்தியங்களின்மை, தாம்வாழும் நாட்டில் அந்நாட்டு மக்களின் உணர்வு மனப்பான்மையில் ஏற்படுகின்ற ஆர்வமின்மை, பொருளின்மை, கூட்டாளிகளினால் சொல்லப்படும் வாழத் தெரியாதவர்கள் என்ற சுலோகங்களும், ஏளனப்படுத்தல்களும், பெருமளவு உழைப்பை உள்ளடக்கிய தங்கள் முயற்சிகளுக்கு எதிர்பார்த்த ஆதரவின்மையும், பலன்களின்மையும்.. போன்றவை நாஸி ஆட்சியின்அன்றைய நாட்களை இன்றும் நினைவுக்குக் கொண்டு வரும்.

இலங்கையின் இலக்கியவிமர்சகராக அறியப்பட்டவரும், பல்கலைக்கழகப் பேராசிரியரும் 6வது இலக்கியச் சந்திப்பில் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்களால் கொல்லப்படுபவர்களுக்கான சவப்பெட்டிகளை நாங்களே இலவசமாக வழங்குவோமென திட்டவட்டமாகக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்"

- கின்னான்ரு.

பேச்சாளராக அழைக்கப்பட்டவருமான ஒருவருக்கு அவர் வாழும் இடத்திலிருந்து பேர்லினுக்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருவதற்கான அனுமதிப் பத்திரம் றைன்லான்ட் மாநில உள்நாட்டலுவல்கள் அலுவலகத்தினால் மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே பாடன்வட்டன்பேக் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலக்கியச் சந்திப்பில் பங்குபற்ற வரவிருந்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நாளாந்தம் கொலைகள் விழும் இலங்கைக்கு தஞ்சம்கோரிய அகதிகள் எவருமே சுயேச்சையாகத் திரும்பிப் போகக்கூடிய மனோநிலையில் இல்லாததினால் இவ்வாறான உரிமை மறுப்புகளும், விரக்தியடைய வைக்கும் சட்ட கெடுபிடிகளும் தஞ்சம்கோரியவர்களை தாங்களாகவே இந்த நாட்டை விட்டுவெளியேற முன்வர வைக்கும் என்ற அரசின் யோசனையே இப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அரசியல் தஞ்ச விண்ணப்பம் மறுக்கப்பட்டவர்கள் சுயமாக நாட்டைவிட்டு வெளியேற இது போன்ற ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்துக்குச்செல்ல அனுமதி மறுப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிநாட்டவர்களுக்கான பொலிஸ் அதிகாரியொருவரே எனக்கு நேரடியாகத் தெரிவித்துள்ளார். அரசியல் தஞ்சச் சட்டம் இதற்கு நன்றாகவே இடம் கொடுக்கிறது.

1989இல் கிழக்குஐரோப்பிய மக்களின் சுயாதீனமான உலக நகர்வு பற்றி அதிகமாகவே அலட்டிக்கொண்ட இந்நாட்டு மக்கள் தொடர்புசாதனங்களில் அநேகமானவை அகதிகள் தாங்கள் வாழும் சிறிய நகர வட்டத்தைவிட்டு வெளியேற முடியாதிருப்பதை, வெளியேற வேண்டுமானால் 'விசேட அனுமதி' பெற வேண்டியிருப்பதைப் பற்றி குறிப்பிடுவதேயில்லை.

மேலும் கிறிஸ்தவ ஜனநாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கக் கட்சி என்று சொல்லுபவர் களின் ஆட்சி நடக்கும் ஒரு சில மாநிலங்களில் வாழும் அகதிக ள் நத்தார் தினத்துக்குகூட தங் கள் நகரைவிட்டு வெளியேற அ னுமதிக்கப்படாதது முற்றிலும்கே வலமானதாகும்.

இப்படியான அரசின் கடு மையான நடவடிக்கைகளால் 6வது இலக்கியச் சந்திப்பின்பல ரது இருக்கைகள் வெற்றிடமாக வேயிருந்தன.

## 6வது இலக்கியச் சந்திப்பு

தமிழ் சஞ்சிகைகளின் ஆக் கதாரர்களும், வாசகர்களும், ஏ னையோரும் கலந்து கொண்ட 6வது இலக்கியச் சந்திப்பு மே ற்கு பேர்லினில் 22.12-24. 12.89வரை நடைபெற்றது.

இச் சந்திப்பில் சுமார் 160 பேர்வரை கலந்து கொ ண்டார்கள். பத்திரிகையாளர்கள் அரசியல்-இலக்கிய விமர்சகர்க ள், நடிகர்கள், கவிஞர்கள், சமூக வியலாளர்கள், ஆர்வலர்கள் என் போர் தனியாக மேற்கு ஜேர் மெனியில் இருந்து மட்டுமல்லாது இங்கிலாந்து, நெதர்லாந்து, சுவீ டன், டென்மார்க், நோர்வே, பி ரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்தனர்.

ஐனஞயகத்திற்கும், சூழலுக் குமான பயிற்சி நிறுவனத்தின் ஆ தரவுடனும், சர்வ கலாச்சாரச் சந்திப்பு நிறுவனத்தின் அனுசர- ணையுடனும் தமிழர்களால் இச்ச ந்திப்பு நடாத்தப்பட்டது.

முதல்நாள் நிகழ்ச்சியாக வரவேற்பினையடுத்து ஒக்ரோ பர் 88இல் இறந்து போன ஜேர்மென் பத்திரிகையாளர் - பிகிவொல்வ்வுக்கும், செப்ரெம்ப ர்89இல் கொல்லப்பட்ட ராஜ னி திரணகமவுக்கும், தமது வாழ் க்கையை தியாகம் செய்தவனை த்து மக்களுக்கும் இச் சந்திப்பு அர்ப்பணம் செய்யப்பட்டது.

இதனையடுத்து சஞ்சிகை- களின் அறிமுகப்படுத்தலும், வாச கர்களின் விமர்சனங்களும் இடம் பெற்றன. சஞ்சிகைகளைப் பற்றி விமர்சனங்கள் அதிகளவில் இடம் பெறவில்லை.

இரண்டாம்நாள் நிகழ்ச் சியில் 1992இல் ஐரோப்பிய- நாடுகளுக்கிடையே எல்லைகளக ற்றப்படப்போவதும், அதனல் அகதிகளுக்கு ஏற்படப் போகின் ற பிரச்சினைகள் பற்றியும் பத் மமனோகரன் விபரித்தார்.

சுமார் 100 வருடங்களு க்கு முற்பட்ட தமிழர்களின் புல ம்பெயர்வு பற்றிய ஆய்வினை - வ.ஐ.ச.ஜெயபாலன் முன்வைத் தார்.

இந்தியாவுக்கு நாடுகடத் தப்பட்ட மலையகத் தமிழர்கள் மனித குலமே வெட்கப்படவே ண்டிய துயரமான நிலையில் வா ழ்ந்துவருவதை நித்தியானந்தன் உணர்வுபூர்வமாக விபரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழியும் எழுத்தும் எனும் தலைப்பில் தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தம் பற்றியும், புலம் பெயர்ந்த சமூகத்தின் மொழியியல் பற்றியும் அவசியமான தகவல்களையும், இதுவரை நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எழுத்துச் சீர்திருத்தத்தின் முழுமையடையாத தன்மைகளையும் கா. சிவசேவகரம் விளக்கிக் கூறினார்.

சமதர்மம் கனவும், நனவும் என்ற தலைப்பில் இன்றுகிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் நிகழ்வுகளும், அதனால் ஈழப் போராட்டத்தில் நடைபெற வேண்டிய மீள்பார்வைகள் பற்றியும் சண்முகரட்ணம் விபரித்தார்.

இவர்களின் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின் மேற்படி விடயங்கள் பற்றி சபையோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ரஜின்குமார், க. ஆதவன், இளவாலை விஜயேந்திரன் ஆகிய மூவரும் ஒன்றாக இணைந்து நடாத்திய கவிதா நிகழ்வு சபையினருக்கு மாறுபட்ட அம்சமாகவிருந்தது.

மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் சிறுகதைகள் பற்றிய சிவேந்திரனின் ஆய்வுடன் ஆரம்பித்தன.

ரஞ்சனி, கல்யாணி, உமா, தயாநிதி ஆகியோரின் பெண்நிலைவாதம் என்ற தலைப்பின் கீழான நிகழ்ச்சி ஆரம்பித்ததும் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

இன்றுவரையுள்ள இலக்கியங்களில் பெண்கள் பற்றிய சித்தரிப்புகள் புதுப்பித்து எழுதப்பட வேண்டிய தேவை, கலாச்சாரம் எனும் போர்வையில் பெண்களுக்கு விலங்கு மாட்டி அடக்கி வைத்திருக்கும் நிலை என்பன இவர்களால் விவாதிக்கப்பட்டன. இலக்கியம் மட்டுமல்லாது கலாச்சார, சமூக, பாரம்பரியங்கள், புதிய கலாச்சாரச் சூழல் என்பனவும் இவர்களால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது அடிப்படை அம்சமாக இருந்தது.

இந்த நேரத்தின்போது ஆண்கள் தரப்பிலிருந்து இதற்கான ஆதரவின்மையை அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து பாலேந்திரா, ஆனந்தராணி தம்பதிகளின் நாடகம் பற்றிய விளக்கவுரைகள் இடம்பெற்றன. இதன் போது 'முகமில்லாத மனிதர்கள்' என்ற நாடகத்தின் ஒரு பகுதி இவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டபோது அது அனைவரையும் கவர்ந்தது.

1990 ஏப்ரலில் நடைபெறவுள்ள 7வது இலக்கியச்சந்திப்பு கிறபெல்ட் நகரத்தில் நடாத்தப்படும் எனவும், அதற்கான செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

அத்துடன் 6வது இலக்கிய சந்திப்பின் நிகழ்ச்சித் தொகுப்பு தமிழிலும், ஜேர்மனிலும் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கபட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு ஜேர்மெனியில் ஓர் இணைவு.

பல நூற்றுண்டு கால காலனித்துவத்திற்குப் பின் 4.2.48 இல் 'சுதந்திரம்' என்று கூறப்படும் ஒன்று இலங்கைக்குக் கிடைத்தது.

அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை இலட்சக்கணக்கானவர்கள் இலங்கை முழுவதிலும் அரசியற் காரணங்களுக்காக கொல்லப்பட்டுள்ளார்கள்.

தன்னை தக்க வைத்துக்கொள்வதற்காக நாட்டைஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைத்துள்ள இலங்கையரசு பட்டினியும், கண்ணீரும், கம்பலையும், பயமும், மரணமுமாய் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் 'சுதந்திர' தினத்தைப் பிரம்மாண்டமான தேசிய எழுச்சியாகக் கொண்டாடுகிறது.

அரசினதும், அரச 'எதிர்ப்பு' குழுக்களினதும் வர்க்கநலன்களுக்காகப் பலியிடப்பட்ட மக்களின் இரத்தத்தைப் பூசிக்கொண்டு இலங்கையரசும், அதன் பழைய, 'புதிய' கூட்டாளிகளும் வாணவேடிக்கைகள், கோலாகல விழாக்கள், கொடி ஏற்றல் என 'சுதந்திர தினம்' கொண்டாடி கூத்தடிக்கின்றனர்.

அடக்குமுறைகளுக்கும், அநியாயங்களுக்கும் எதிராக மக்கள் அமைப்பாகிச் செயற்படுவதற்கு அரசும், இயக்கங்களும் கூட்டாகத் தடைவிதித்துள்ளன. மனித உரிமைகளுக்காக உழைப்பவர்களுக்கு அரசும், இயக்கங்களுமே எதிரியாகப் போன நிலையில், தற்காலிகமாகப் பாசிசம் இலங்கை முழுவதிலும் நிறுவப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசியற், பொருளாதார, இவையிரண்டும் இணைந்த காரணிகளினுல் வெளிநாடுகளுக்கு வந்துவிட்ட இலங்கை மக்களுக்கு, இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குச் சார்பாக செயற்படவேண்டிய பொறுப்பு உள்ளது.

இந்தப் பொறுப்பை உணர்ந்து அதற்காகச் செயற்படுவோர் வெளிநாடுகளில் இருப்பவர்களில் எத்தனை வீதத்தினர் என்பது கேள்விக்குறியே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் 'போராடும்' உரிமையை தங்களுக்கேயுரியது என சுதந்திர மறுப்புச்செய்யும் 'விடுதலை' இயக்கங்கள் தங்களை விளம்பரப்படுத்தவும், பணம் சேர்க்கவும் வெளிநாடுகளில் உருவாக்கிய கிளைகள் தங்கள் தலைமை அமைப்புகள் - போலவே வெளிநாடுகளிலும் இலங்கைப் பிரச்சினைகளுக்காகக் 'குரல்' கொடுப்பதை தங்களுக்குக் கீழேயே அமுக்கிக் கொண்டார்கள்.

தங்களது செய்திப் பிரசுரங்களும், தொலைபேசிச் செய்திகளுமே 'உண்மை' எனவும், இலங்கை 'அரசு'க்கு எதிராகவோ(?), இந்திய அரசுக்குச் சார்பாகவோ, எதிராகவோ! ஊர்வலங்கள், கூட்டங்கள் எனபனவற்றைத் தாங்களே நடாத்த- வேண்டும் என்றும் தனி மனித உரிமைகளைத் தாங்களே குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள்.

இதன் விளைவாக ஒருபக்கச் சார்பான பிரச்சாரங்கள் வெளிநாடுகளில் பரப்பப்பட்டுள்ளன.

பொது எதிரியான இலங்கையரசை இனங்காட்டுவதற்குப் பதிலாக சிங்கள மக்களே தமிழ் மக்களின் எதிரிகள் என்றும் (தமிழர்கள் பயங்கரவாதிகள் என வெளிநாடுகளில் உள்ள சில சிங்களவர்களாலும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. )

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தைச் சுற்றி வேலிபோடுவதே தங்கள் போராட்டம் என்றும் பிரச்சாரம் செய்ததில் இலங்கையில் வாழும் சிறுபான்மையினரது உண்மைநிலை சர்வதேச கவனத்தை முழுமையாக ஈர்த்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

இத்தகைய சூழ்நிலையிலும் மனிதாபிமான செயற்பாடுகள் முனைப்புப் பெறுமலில்லை. மேற்கு ஜேர்மெனியில் இருக்கும் சிங்கள, தமிழ் மக்களை உள்ளடக்கிய 'இலங்கையர் சங்கம்' எனும் அமைப்பு 5.2.90இல் மேற்கு ஜேர்மெனியிலுள்ள இலங்கைத் - தூதரகத்திற்கு முன்பாக நடத்திய எதிர்ப்பு நடவடிக்கையை இதற்கு ஒரு உதாரணமாகக் - கொள்ளலாம்.

ஜோசப்

சுதந்திரமான அரசியற் கருத்துகளோடு, இலங்கையில் தற்போது 'பிரபல்யமாக' இருக்கும் கட்சி, குழுக்களைச் சாராது, சிங்கள, தமிழ், முஸ்லீம் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்பாக 'இலங்கையர் சங்கம்' உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அவனை வேலையால துரத்திப்போட்டு எனக்கு நல்ல வேலை போட்டுத் தந்தியள். இப்ப என்னடாவெண்டால் அவனுக்கு திருப்பி வேலை குடுக்கப் போறன். நீ வெளியில போவெண்டு என்னைக் கலைக்கிறியள்"

"உன்னை வைச்சுப் பாக்க வேண்டின — வேலையளைப் பாத்தாச்சு. இனி அவனை வைச்சுக் கொஞ்ச வேலையள் பாக்க வேணும். உன்னைப் பிறகும் தேவைப்பட்டா ஆளனுப்பி கூப்பிடுறன்"

"நீங்கள் துரோகி. நம்ப வைச்சு ஏமாத்திப் போட்டியள்"

"நீ மட்டும் திறமே? உன்னை வேலைக்கு வைச்சாப் பிறகு நான் சொல்லி எத்தினை அநியாயம் செய்தனி"



இலங்கையில் நடைபெறும் அனைத்துப் படுகொலைகளும் நிறுத்தப்பட வேண்டும், நாடு தழுவிய மனித உரிமைகள் வேண்டும் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கு அரசியல் தீர்வு வேண்டும் போன்ற சில கோரிக்கைகளை உள்ளடக்கி சிங்களம், தமிழ், டொச் மொழிகளில் எழுதப்பட்டசுலோக அட்டைகளைத் தாங்கியபடி சுமார் 60க்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், டொச் மக்கள் இலங்கைத் தூதரகத்திற்கு முன் தம் எதிர்ப்பைத் தெரிவித்த குழுமியிருந்தனர்.

இலங்கையர் சங்கத்தின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஏற்றுக்கொள்ள தூதவர் மறுத்ததால், தூதவரின் முதலாவது செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

எனினும் எதிர்ப்பு நடவடிக்கை முடிவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் இலங்கையர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க விரும்புவதாக தூதவரால் ஆளனுப்பித் தெரிவிக்கப்பட்டது.

தங்களிடம் கையளிக்கப்பட்ட மகஜரை தாம் இலங்கைக்கு அனுப்பி வைப்பதாகவும், இப்

www.tamilarangam.net

படியான எதிர்ப்பு நடவடிக்கைகள் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதைத் தடுக்குமே தவிர வேறெதுவும் செய்யப்போவதில் லையாதலால் இப்படியான நடவடிக்கைகளை கைவிட்டு தங்களுடன் வந்து கதைக்குமாறு தூதவர் இலங்கையர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

எப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டியது மக்களே தவிர தூதரகம் அல்ல என அவர்கள் தூதவரிடம் தெரிவித்தனர்.

10.00மணியிலிருந்து பிற்பகல் 13.00மணிவரை தூதரகத்திற்கு முன் இவ்வெதிர்ப்பு நடவடிக்கை நடாத்தப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையினால் பாரிய தாக்கம் ஏற்பட்டது எனச் சொல்ல முடியாவிட்டாலும், பொது எதிரிகளுக்கு எதிராகவும், மனித உரிமைகளுக்காகவும் தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந் நடவடிக்கையை மேற்கொண்டது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதுடன் ஜேர்மென் மக்களுக்கும் உண்மை நிலையைக் காட்டியுள்ளது

தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை 'இலங்கையர் சங்கம்' எப்படி வளர்ச்சிப்போக்கில் நகர்த்தப் போகிறது என்பது கேள்விக்குரியதாகவிருந்தாலும், இதற்கான பதிலை

(தொடர்ச்சி 32ஆம் பக்கத்தில்)

# நூல் அறிமுகம்




தொடர்புகட்கு:

M. P. Konezsh
Schützendelle 2
4052 Korschenbroich 3
WEST GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.01.90 (வீரகேசரி)

1989ஆம் ஆண்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 7,000 பேர் பலியாகியுள்ளனர்.

இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து வவுனியா நகரவீதிகளில் இலங்கை இராணுவத்தினர் ரோந்து புரிகின்றனர்.

01.01.90 (டெய்லி நியூஸ்)

லண்டன் கெற்விக் விமானநிலையத்தில் வந்திறங்கிய 64தமிழர்கள் போலிவிசாக்கள் வைத்திருந்தார்கள் எனக் காரணம் காட்டப்பட்டு இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்களில்ஒரு பெண்ணும், 4 ஆண்களும் கட்டுநாயக்க பொலிசாரினால் விசாரணைகளுக்கெனகொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

02.01.90 (ஐலண்ட்)

கொனபிநுவெல பகுதியில் 10 சடலங்கள் காணப்பட்டன.

களனிய பொலிஸ் பகுதியில் எரிந்தநிலையில் சடலங்கள் காணப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் இலங்கைப்படைகளால் 20 ஆயுதபாணிகள் கைதுசெய்யப்பட்டனர்.

03.01.90 (டெய்லி நியூஸ்)

கண்டி பகுதியில் வெட்டப்பட்ட காயங்களுடன் 5 பிரேதங்கள் காணப்பட்டன.

03.01.90 (வீரகேசரி)

செட்டிக்குளத்தில் நடைபெற்ற இயக்க மோதலில் 52பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

"பாராளுமன்ற மாயைக்கு உட்படாது அடிமட்ட மக்கள் மத்தியில் தனதுபணியை முழுமையாகச் செயற்படுத்திய தோழர் சுப்பிரமணியத்தின் மறைவால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை எடைபோட அவர் மதித்த சேவை செய்த உழைக்கும் மக்கள் தான் அருகதையுள்ளவர்கள். தோழர்சுப்பிரமணியம் சாய்மனைக் கதிரை சோசலிஸ்டாக வாழவில்லை. அவர் உழைக்கும் மக்களின், அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தனது கட்சி நடத்திய போராட்டத்தில் எல்லாம் முன்வரிசைப் போராளியாகப் பங்குபற்றினார்" —அஞ்சலிக் கூட்டத்தில் ஏ.ஜே.கனகரட்ன.

04.01.90 (வீரகேசரி)

கலகா பத்திராவதி குன்று என்ற இடத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் பொலிசார் 16பேரைச் சுட்டுக் கொன்றனர்.

கண்டியில் 5 சடலங்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டன.

மகாவத்தையில் 3 பெண்கள் உட்பட ஐவர் வெட்டிக் கொல்லப்பட்டனர். அம்பாந்தோட்ட மாவட்டத்தில் ஒருவாரத்தில் சுமார் 200 சடலங்கள் வீதி வழியே எரிக்கப்பட்டும், தலைதுண்டிக்கப்பட்டும் இருந்தன.

04.01.90 (சன்)

செட்டிக்குள்ம பகுதியில் எல்.ரி.ரி.ஈ–ரி.என்.ஏ மோதலில் 81பேர் கொல்லப்பட்டனர். 20பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 20பேர்புளொட் உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மோதல்கள் நடந்துகொண்டிருந்த இடத்துக்கு விரைந்த இலங்கைப்படைகள் ரி.என்.ஏ.முகாம்களிலிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றினர். இரண்டு வருடங்களின் பின் இப்பகுதியில் முதற்தடவையாக இலங்கைப்படைகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

04.01.90 (ஐலண்ட்)

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் காங்கிரஸ் கட்சி தலைமை அலுவலகத்தைவிட்டு உடனடியாகக் குடும்பத்துடன் வெளியேறும்படி கட்சி உதவிச் செயலாளர் ஆனந்த–ராஜா ஈ.என்.டி.எல்.எவ்வால் மிரட்டப்பட்டுள்ளார்.

வவுனியாவிலுள்ள புளொட் முகாம்கள்இலங்கைப் பொலிசாரினால் சோதனையிடப்பட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

05.01.90 (டெய்லி நியூஸ்)

மன்னார் பகுதியில் புளொட்–எல்.ரி.ரி.ஈ.க்கிடையிலான மோதலில் 50பேர் கொல்லப்பட்டனர்.

05.01.90 (வீரகேசரி)

பெரியகுஞ்சு குளத்தில் நடைபெற்றமோதலில் 50பேர் கொல்லப்பட்டனர்.

திருகோணமலையில் ரவிக்குமார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உப்புவெளியில் சிறிதரன் என்பவர் கொல்லப்பட்டு சடலம் மின்கம்பத்தில் காணப்பட்டது.

07.01.90 (சண்டே ரைம்ஸ்)

கடந்த வருடம் 12,000பேர் நாடு முழுவதிலும் கொல்லப்பட்டுள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 1,435பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

09.01.90 (டெய்லி நியூஸ்)

சாவகச்சேரியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் எல்.ரி.ரி.ஈ.யால் கொல்லப்பட்டனர்.

அம்பாறையில் எல்.ரி.ரி.ஈ.யால் கடத்தப்பட்ட 3 முஸ்லீம்கள் இலங்கைப்படைகளின் தலையீட்டால் விடுவிக்கப்பட்டனர்.

10.01.90 (ஐலண்ட்)

தென்பகுதியில் எரிந்தநிலையில் 18 சடலங்கள் காணப்பட்டன.

11.01.90 (ஐலண்ட்)

திருகோணமலையில் ஜோர்ஜ் தம்பிராசா என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினரும் அவரது 4 மெய்ப்பாதுகாவலர்களும் எல்.ரி.ரி.ஈ.யால் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்பட்டியவில் 3பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

12.01.90 (டெய்லி நியூஸ்)

மலேசியாவுக்குள் பிரவேசித்த 6 இலங்கையர்களுக்கு கோலாலம்பூர் நீதிமன்றம் 4 மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளது. மலேசியாவில் வேலை வாங்கித்தருவதாகக் கூறி ஒராளுக்கு 40,000ருபா வாங்கிய ஏஜென்சி ஒருவன் இவர்களை மலேசியாவுக்குள் கொண்டுவந்து விட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டானாம்.

12.01.90 (ஐலண்ட்)

பலாலியில் 2 இந்திய இராணுவத்தினர் எல்.ரி.ரி.ஈ.யால் கொல்லப்பட்டதை தொடர்ந்து பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளுக்கு வந்துள்ளனர். கடந்த 10 நாட்களில் 60பேர் ரி.என்.ஏ.யால் யாழ்குடாவில் கொல்லப்பட்டுள்ளனர்.

12.01.90 (வீரகேசரி)

தோட்டப் பகுதிகளில் வயிற்றோட்டநோய் பரவுகிறது. கடந்த 11 தினங்களுள் 2பேர் பலியாகியுள்ளனர். மேலும் ஐவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு 305 மக்கள் தொண்டர்படையினர் மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். இவர்கள் அனைவரும் இங்குள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளனர்.

13.01.90 (வீரகேசரி)

"கனேமுல்ல இராணுவ முகாமில் ஒரு குழுவினருக்கு பிஸ்டல் சுடும் பயிற்சியளிக்கப்பட்டு எதிர்கட்சித் தொண்டர்கள், தேர்தல் முகவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய உறுப்பினர்கள் ஆகியோரை அழித்தொழிக்க பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல பகுதிகளிலும் அரசியல் ஆதரவுடனான பரா இராணுவப்படைகள் இளைஞர்களைக் கடத்திச் சென்றுகொலை செய்யும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. என்பது இரகசியமானதல்ல" பாராளுமன்றத்தில் சிறிமாவோ

"தனியே பாண் சாப்பிடுபவர்களுக்குக்கூட மாதம் 1,000 ருபாவுக்குமேல் வேண்டியுள்ளது" —பாராளுமன்றத்தில் தினேஷ்

"இந்தியா கோரியதால்தான் தமிழீழக் — கோரிக்கையைக் கைவிட்டோம். இந்தியா உதவாவிடில் மீண்டும் தனி ஈழத்துக்காகப் போராடுவோம்" —சென்னையில் வரதராஜப் பெருமாள்

"கொல்லப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்தை அடைந்ததும் நினைவு முத்திரை ஒன்று வெளியிடுங்கள். மனித எலும்புகள், ரயர் ஆகிய சின்னங்களைக் கொண்டதாக குறித்த நினைவு முத்திரையை வெளியிடுமாறு தபாற் தந்திகள் தொடர்பு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். விஜேவீர, உபதிஸ்ஸ ஆகியோர் வாழ்க்கையை பகிரங்கப்படுத்திய அரசு அன்டன் பாலசிங்கம் தம்பதிகள் 5 நட்சத்திர ஒட்டல்களில் தங்கி சுகபோகம் அனுபவிப்பதை பகிரங்கப்படுத்தாதது ஏன்? சட்டவிரோதப் படைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறுகிறது. ஆனால் ஜீப்புகளில் பயணம் செய்யும் சட்டவிரோதப் படையினர் சட்டவிரோதமாக வாலிபர்களைக் கடத்திக் கொலை செய்கிறார்கள். இந்தச் சட்டவிரோதப் படையினருக்கு 10,000 ருபாவரை சம்பளம் வழங்கப்படுகிறதாம்" —பாராளுமன்றத்தில் ஜெயராஜ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

15.01.90 (வீரகேசரி)

யாழ்நகரில் ஆயுதமேந்திய குழுக்களினால் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு பணம் பறிக்கப்படுவதும், பணம் தர மறுப்போர்கொலைசெய்யப்படுவதும் தொடர்ந்தவண்ணமுள்ளது.

16.01.90 (வீரகேசரி)

நாட்டின் பல பகுதிகளிலும் 48மணி நேரத்தில் 30 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மாத்தளையில் 17 சடலங்கள் எரிந்தும், தலையில்லாமலும் வீதியோரங்களில் காணப்பட்டன.

தங்கள் மனைவிமாருடன் புகையிரதத்தில் பயணஞ் செய்துகொண்டிருந்த மக்கள் தெண்டர் படையினர் கிளிநொச்சியில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர்.

"தமிழீழப் போராட்டத்திற்கு தடையாக இருப்பவர்கள் துரோகிகளாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்று நாம் செய்த எச்சரிக்கையை மீறி செயற்பட்டவர்களை நாம் மன்னிக்கத் தயாராயில்லை அதன் காரணமாகவே த.வி.கூ.தலைவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது"-புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற் பொறுப்பாளர்.

கண்டி பேராதனைப் பகுதியில் 15 சடலங்கள் மீட்கப்பட்டன.

17.01.90 (வீரகேசரி)

பெப்ரவரி மாதம் இலங்கை-இந்தியநட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது.

'கறுப்புக் காககங்கள்' என்ற பெயரில் தென்பகுதியில் புதிய இயக்கம் தோன்றியுள்ளது.

18.01.90 (வீரகேசரி)

தமிழ் தேசிய இராணுவத்தின் அட்டகாசம் முழுவதிற்கும் முகம் கொடுத்துவிட்டு ஓயும் நிலையில் விடுதலைப்புலிகள் முஸ்லீம்களிடம் சென்று பணம் கேட்கத் தொடங்கியுள்ளனர். பள்ளிவாசல்களுக்கும்போய் முஸ்லீம்கள் பணம் தந்து விடுதலைப்புலிகளை ஆதரிக்க வேண்டுமெனக் கூறுகின்றனர்.-முஸ்லீம் காங்கிரஸ்

கருகண்ணவையில் பொலிசாரால் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

19.01.90 (வீரகேசரி)

ஆயுதபாணிகளால் கூட்டிச் செல்லப்பட்ட பிரேமானந் என்ற இளைஞர் கோப்பாய் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மத்தியில் யூ.என்.பி.ஆட்சியும், வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.ஆட்சியும் ஏகாதிபத்தியத்திற்கு எவ்வளவு நன்மையாக இருக்கும்.தனது கொள்கைகளுக்கும், நோக்கங்களுக்கும் எதிரான ஏனைய தமிழ்இயக்கத்தின் அங்கத்தவர்களை இயங்க அனுமதிக்கப் போவதில்லையென எல்.ரி.ரி.ஈ.பிரகடனப்படுத்தியதையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணசபையின் அங்கத்தவர்கள் கொலைகள் இடம்பெற்றுள்ளன" -இலங்கை கொம்யூனிட் கட்சி

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் கல்முனை மரடிப்போ விரைவில் மூடப்படவுள்ளது.இதனால் 2,000தச்சுத் தொழிலாளர்கள், 200 மாட்டுவண்டி தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவர்.

20.01.90 (சன்)

அம்பாறையில் 3 எல்.ரி.ரி.ஈ ஆயுத-பாணிகள் சிங்களவர்களின் நான்கு விடுதி

www.tamilarangam.net

களில் புகுந்து கொள்ளையடித்ததுடன் ஆ ரியசேன என்பவரைச் சுட்டுக் கொன்றுள் ளனர்.

அம்பாறையில் மீராலெப்பை என்ற எல். ரி.ரி.ஈ. உறுப்பினர் சுட்டுக்கொல்லப்ப ட்டார்.

20.01.90 (ஐலண்ட்)

மொனராகலையில் பொலிசார் 3பேரை சுட்டுக் கொன்றனர்.

எல்.ரி.ரி.ஈ வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கணேசமூர்த்தி , ஜோர்ஜ் தம்பிராசா ஆகியோர் கொ ல்லப்பட்டதை ஐ.சோ.மு.கண்டித்துள்ள து.

20.01.90 (வீரகேசரி)

இலங்கை வெளிநாட்டமைச்சர் சர்வதே ச மனித உரிமைகள் சங்கம் ஒரு பயங் கரவாத ஸ்தாபனம் எனக் குற்றஞ்சாட் டியதை அச் சங்கம் கண்டித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் இங்குள்ள வர்த்தகவ ங்கிகளில் இரகசியக் கணக்குளை வைத்தி ருக்க இலங்கை அரசாங்கம் அனுமதி வ ழங்கியிருப்பதாக அமைச்சரவைப் பேச் சாளர் தெரிவித்துள்ளார்.

உமையாள்புரத்தில் தமிழீழவிடுதலைப்புலி களினால் கொழும்பு நோக்கிவரும் யாழ் புகையிரதம் தடுத்து வைத்து சோதனை நடைபெறுகிறது.இச் சோதனையின்போ து சிலர் கைதுசெய்யப்படுகின்றனர்.

22.01.90 (வீரகேசரி)

வவுனியா நகரில் இயக்கமொன்றின் முகா மைச் சோதனையிட்ட புலிகள் அங்குமல சல கூடக் குழியொன்றில் 3 உருக்குலைந் த சடலங்களைக் கண்டுபிடித்தனர்.

'ஈழத்துக் குரல்' என்ற இரகசியவானொலி ஒலிபரப்பொன்று வடக்கு,கிழக்கில் ஒலி பரப்பாகிறது.

23.01.90 (டெய்லி நியூஸ்)

பொலநறுவையில் பாதுகாப்புப் படைக ளால் 9பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

மொனராகலையில் பொலிஸ் கொமோ ண்டோக்களால் 4பேர் சுட்டுக் கொல் லப்பட்டனர்.

23.01.90 (வீரகேசரி)

அரியாலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் மு காம் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச் சியான தாக்குதல் மேற்கொண்டதாகவு ம்,இதில் மோட்டார் மற்றும் சிறு ஆயு தங்கள் பாவிக்கப்பட்டதாகவும் தெரிகி றது.இம்மோதல்களின் விளைவாக அப்ப குதியைச் சேர்ந்த 700பேர் வீடு,வா சல்களைவிட்டு வெளியேறி தேவாலயங்க ளிலும்,கோயில்களிலும் தஞ்சமடைந்துள்ள னர்.

ஈ.பி.ஆர்.எவ்.எவ்,ரெலோ,ஈ.என். டி.எல்.எவ்,புளொட் ஆகிய 4 அமைப் புகளின் இணைப்பான தமிழ் தேசியசபை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத் தச் சந்தர்ப்பம் தருமாறு கேட்டுள்ளது

"எமது நாட்டு இளைஞர்கள் ஆயுதத் ஏ ந்திப் போராடக் காரணம் பதவி ஏற் கும் அரசாங்கங்களின் மீது நம்பிக்கையி ழப்பதே"-இராஜாங்க அமைச்சர்

24.01.90 (வீரகேசரி)

அரியாலை மணியம் தோட்டத்தில் நட ந்த மோதலின் விளைவாக 71பேர்கொ ல்லப்பட்டனர்.விடுதலைப்புலிகள் இச்சட லங்களை அப் பகுதியில் வைத்தே எரித் தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வவுனியாவில் கைவிடப்பட்ட முகாம் ஒன்றிலிருந்து புதைக்கப்பட்ட சடலம் மீட்கப்பட்டது.

25.01.90 (வீரகேசரி)

கொக்குவிலில் விமலேந்திரன் என்பவரும் வடலியடைப்பில் கண்ணன் என்பவரும் ஆயுதபாணிகளால் சுட்டப்பட்டார்கள்.

யாழ்நகரில் பூட்டப்பட்டிருக்கும் கடைகள் உடைத்து திருடப்பட்டு வருகிறது.

தோட்டப் பகுதிகளில் உள்ள பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் அகற்றப் பட்டு வருகின்றன.

நிறைவு செய்யப்படாமல் இருக்கும் தமிழ் பேசும் மக்களின்உரிமைகளை வென்றெடுக்க கவனம் செலுத்த வேண்டிய நீங்கள் இயக்க மோதல்கள் மூலம் இனத்தையே அழித்துக் கொண்டிருக்கிறீர்கள். தொடர்ச்சியாக மோதல்களைத் தொடர்வதன் மூலம் தலைவர்களையும் அழித்து இளைஞர்களையும் அழித்து வடக்குக் கிழக்கு மக்களின் செல்வங்களையும் நாசம் செய்து சகலம் அழிந்த பின்னர் சாம்பல் மேட்டில் வெள்ளொகிக்கும் செடிகளை நாட்டுவதன் மூலம் என்ன பலனை நாம் அடையப் போகிறோம். "—அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச விவசாயிகள் சம்மேளனம்

26.1.90 (டெய்லி நியூஸ்)

இந்திய இராணுவம் யாழ்பாணத்தை விட்டு வெளியேறிய பின் அங்கு இலங்கை பொலிசார் சிவில் நிர்வாகத்தை பொறுப் பேற்றுள்ளனர். ஆனையிறவு, பருத்தித்துறை, யாழ்பாணம் ,வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் பொலிஸ் சோதனை முகாங்கள் இயங்க உள்ளன. பளை, குருநகர், நல்லூர், ஆனைக்கோட்டை, சுன்னாகம், புலோலி, பன்னை ஆகிய இடங்களில் புதிய கட்டிடங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும்.—பாதுகாப்பமைச்சர்

26.01.90 (ஐலண்ட்)

ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, ஈ.பி.ஆர் எல்.எவ், த.வி.கூ ஆகியவற்றை எதிர்த்து ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்று எல்.ரி.ரி.ஈ.யால் வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஊர்வலத்தின் முடிவில் பத்மநாபா, செல்வம், ராஜன், மாவை சேனாதிராசா ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

டிசம்பர்15 முதல் ஜனவரி14 வரை 455பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

26.01.90 (வீரகேசரி)

ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட், ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய இயக்கங்களை உள்ளடக்கிய தமிழ்த் தேசியசபை உறுப்பினர்கள் அமைச்சர் ரஞ்சனை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலும் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வைபவங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன

"புலிகள் ஜனநாயகப் பொதுவோட்டத்திற்குள் இணைவதை நாம் விரும்புகிறோம். ஆனால் தங்களிடம் இருக்கும் துப்பாக்கிகளின் அதிகாரத்தின் காரணமாக தாங்கள் சொல்பவைகளையே மற்றவர்கள் செய்ய வேண்டுமென புலிகள் எதிர்பார்க்க கூடாது" — அஷ்ரப்

"மாகாணசபை கலைக்கப்பட்டதும் குறிப்பிட்ட காலத்திற்கு கவர்னர் ஆட்சி நடைபெறும். அதன் கீழ் தேர்தல் நடைபெறும். இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படுத்தப்பட மாட்டாது. இத் தேர்தலில் எந்த ஒரு கட்சியோ அல்லது குழுவோ எம்மை எதிர்த்துப் போட்டியிடலாம். ஜனநாயக முறையில் மக்கள் தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் மாகாணசபை அமைக்கப்படும்"— யோகி

கல்முனையில் பிரபல கவிஞரான அன்பு முகைதீன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

28.01.90 (வீரகேசரி)

யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள இந்திய அமைதிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை விடுதலை செய்வது ஆரம்பமாகியுள்ளதென தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கப் பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

29.01.90 (வீரகேசரி)

வடக்கு—கிழக்கு மாகாணசபை முன்னாள் அமைச்சர் கணேசலிங்கம் திருகோணமலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

"எந்த அடிப்படைப் பிரச்சினைகளின்கீழ் ஈழக் கோரிக்கை உதயமானதோ அவை அனைத்தையும் ஜனாதிபதி பிரேமதாசா தீர்த்து வைப்பதாக எம்மிடம் உறுதியளித்துள்ளார்" —யோகி

30.01.90 (வீரகேசரி)

திருகோணமலையில் சதானந்த ஜோதி என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

த.வி.கூ. தலைவர்களான அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் ஆகியோரின் கொலைகளுக்கு காரணம் என்ன? என்று மக்கள்கேட்டபோது, "அமிர்தலிங்கம் லிபியாவுக்கு சென்றபோது தலைவர் பிரபாகரனையும் அழைத்துச் செல்லும்படி புலிகள்கேட்டனர். அவர் அதனை மறுத்து மகன்காண்டபனை அழைத்துச் சென்றார். இப்படி அநேக காரணங்கள்" என யோகி பதிலளித்தார்.

31.01.90 (வீரகேசரி)

சம்மாந்துறையில் முஸ்லீம் காங்கிரசின் வடக்கு—கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மன்சூர் கடத்தப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார்.

கல்முனை நகரில் 10 முஸ்லீம்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

"இந்த நாட்டின் பாதுகாப்பற்ற முஸ்லீம்களை புலிகள் துன்புறுத்தி அட்டகாசம் செய்யும்போது எவ்வளவு காலத்துக்கு அரசாங்கம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கப் போகிறது?" —அஷ்ரப்

இக் கலத்தில் பிரசுரமாகியுள்ள துணுக்குகளுக்கான சித்திரங்கள் ஆனந்தவிகடன் சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டவை.

---

முன் அட்டைப்படம் இலங்கையில் இயங்கும் இனங்களுக்கிடையிலான நீதிக்கும்சமத்துவத்திற்குமான இயக்கத்தின் பிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டு எம்மால் மாற்றம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

—கடலோடிகள்

---

www.tamilarangam.net

# பேச முடியும்; ஆனால், பேச முடியாது!

சிறுகதை

மதியம் மணி இரண்டு.

வன்னிக் கிராமத்தின் எழில் கொஞ்சும் அழகிய வீதி வெறிச்சோடிக் கிடக்கிறது. அந்த வீதியில் அவ்வப்போது தான் தான் ராஜாவென்றெண்ணும் ஒருநாலு கால் நன்றியுள்ள பிராணி சத்தம் செய்து கொண்டிருந்தது.

வீதியின் இடதுபுறமாக ஐந்தாவதாக அமைந்த ஒரு வீடு. வீடு என்று சொன்னால் சரிவரு-மா? இல்லை...

மாளிகை...?

குடிசை....?

எதுவாகவிருந்தாலென்ன! அது மனிதர்கள் வாழும் ஒரு இருப்பிடம். அங்கே...

"கவிதா, அம்மா கவிதா" பூபாள இராகத்தில் தொடங்கி முகாரி இராகத்தில் முடித்தாள் மீனாட்சி.

"என்னம்மா? கொஞ்சம் பொறுங்கோ.. கையில வேலையாய் இருக்கிறன்" கவிதாஞ்சலி பதிலளித்தாள்.

காலையிலிருந்து நாலுசுவருக்குள் முடங்கிக் கிடந்துகொ-ண்டு.... கையில் பேனையும் தலைமாட்டில் வெற்றுப் பேப்பர்களுடனும் ஏதேதோ பேசிப் பார்த்தாள்... முடியவில்லை!

ப. வி. ஸ்ரீரங்கன்

'சீ.. இண்டைக்கு எதுவுமே எழுத வருகுதில்லை. என்ன இண்டைக்கு எனக்கு?' கவிதாஞ்சலி தனக்குள் பேசிக்கொண்டே தாயிடம் சென்றாள்.

"என்னடியம்மா? கூப்பிடக் கூப்பிட உள்ளயிருந்து என்ன செய்தனீ? பள்ளிக்கூடத்தால தம்பியவங்கள் பசியோட வருவாங்கள் தெரியுந்தானே? இந்தா. இந்த அரிசியைக் கழுவி உலையில -

www.tamilarangam.net

போடு. நான் தோட்டப் பக்கம் போய் கீரை புடுங்கிக் கொண்டு வாறன்" மீனாட்சி கூப்பன் கடையிலிருந்து வேண்டிவந்த அரிசியை கவிதாஞ்சலியிடம்கொடுத்துவிட்டு, கீரை பிடுங்கச் சென்றாள்.

கவிதாஞ்சலிக்கு காலையிலிருந்து மனம் ஒரு நிலையில் இல மனம் ஒருவயப்பட்டிருக்கும்போது நிறைய நிறைய எழுதிக் குவிப்பாள். அவள் ஒரு இலக்கியப்-பித்து.

இப்போது...

சமையலறையில் இருந்து கொண்டு....

என்னயிது வாழ்க்கை..?

என்றைக்குமே நமக்குத் துயரம்தானா? ஏன் நாம் துயரப் படவேண்டியிருக்கு? ஐயா இறந்த பின்னாலே வந்ததுதானே இந்தக் கொடிய தரித்திரம். எந்த நாளும் இப்பிடியே... சோத்துக்கு கஷ்டம் தானா? இல்லை. இந்தக் கஷ்டத்துக்கு காரணமென்ன?

கவிதாஞ்சலி தனக்குள்பல கேள்விகளைப் போட்டுக்கொண்டு உண்மையை அறிந்து கொள்ள முனைந்தாள்.

இச்சமூகத்தின்பாலும், இதன் ஆட்சி அமைப்புகளின் வரையறைகளாலும் ஒவ்வொரு நாளும் மனிதர்கள் படும் துன்பங்களை அவளால் கண்டுகொள்ள முடிந்தது.

இதுகாலவரையும் கவிதாஞ்சலி சமூகத்தைச் சரியாக விளங்கிக்கொள்ள மறுத்தே எழுதிவந்தாள். எப்பவுமே அவளுக்கு காதல் கதையெழுதுவதும், பக்தி கதைகள், புராண, இதிகாச கட்டுக்கதைகளையொட்டிய கதைகள் எழுதுவதுமே வாழ்க்கையாகத் தெரிந்தது. தாயும், தானும் சகோதரர்களும் வறுமையில் — வாடுவதைப் பற்றிக்கூட கவலைப்பட மறுத்தாள்.

சமீப நாட்களாகத்தான் நடைமுறை வாழ்க்கையிலிருந்து அவள் உண்மைகளை இனம் கண்டு கொண்டாள்.

உலையில் இருந்த அரிசியை அகப்பையில் எடுத்து நசித்துப் பார்த்தாள். அரிசி கொஞ்சம் வெந்து முட்டரிசியாகவிருந்தது.

"அக்கோய்"

"அக்கோய்"

பள்ளியிலிருந்து வந்ததும் புத்தகங்களை வீட்டின் ஒருமூலையில் போட்டுவிட்டு நேராக அடுப்படியை முற்றுகையிட்டார்கள் வசந்தனும், குமணனும்.

"அக்கா கஞ்சி வடிச்சிட்டியே?" இது வசந்தன்.

"அக்கா, அம்மா எங்க" இது குமணன்.

"போங்கடா.. போய் கால் முகம் கழுவிக்கொண்டுவாங்கோ. நான் கஞ்சி வடிச்சுத்-தாறன்" கவிதாஞ்சலி கஞ்சி வடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்க ஆயத்தமானாள்.

"அக்கோய், அம்மா எங்கை போயிட்டா?" மீண்டும் வசந்தன்.

"தோட்டப் பக்கம் போனவா கீரை புடுங்க. வசந்தன் நீ போய் அம்மாவைப்பாத்துக்கொண்டு வாறியாடா? கவிதாஞ்சலி தம்பியாரை அன்பாக கேட்டாள்.

"கஞ்சி குடிச்சிட்டுப் போறனக்கா" வசந்தனுக்குப் பசி.

"முதல் போய் பாத்துக் கொண்டுவாடா"

வசந்தன் சிணுங்கிக்கொண்டே தாயைத் தேடிச் சென்றான்.

சிறிது நேரத்தின் பின்..

"பிள்ள! பிள்ள கவிதா ! தம்பியவங்கள் வந்திட்டாங்களாடி?" மீனாட்சி கீரையுடன் கேள்வியையும் கொட்டினாள்.

உள்ளேயிருந்து உடனே பதில் வராமல் போகவே" என்னடி குசினியிக்க செய்யிறாய்? கேட்டது காதில விழேலயே"

"என னை கத்தி ஊரைக் கூட்டுறாய்? அவங்கள் இப்ப கொஞ்சத்துக்கு முந்தித்தான் வந்தவங்கள். குமணன் குசினிக்கயிருந்து கஞ்சி மண்டுறான். மற்றவன் உன்னைத் தேடித்தான் தோட்டத்துக்கு வந்தான்" கவிதாஞ்சலி முடிக்கவில்லை அதற்குள் மீனாட்சி இடைமறித்தாள்.

"என்னடியம்மா சொல்லுறாய்? அவன் தோட்டப் பக்கம் வரேலயேடி. அய்யோ.. பெருமானே நான் என்ன செய்வன்? ஊர்கெட்டுப் போய் கிடக்குது. எந்தக் கும்பல் இவனைப் புடிச்சுக்கொண்டு போச்சோ"

"சும்மா கத்தாதையணை வசந்தன் பெரிய பொடியன். எங்கயாவது சுத்திப்போட்டு வருவான்" கவிதாஞ்சலி தாயை ஆறுதல் படுத்தினாள்.

"ஓமடி.. ஓமடி. உனக்கென்ன தெரியும். ரோட்டால கண்ட கண்ட குத்தியன்கள் துவக்குகளோட திரியிறாங்கள். நான் கூப்பன் கடைக்குப் போயிட்டு வரேக்க கண்டனான்" மீனாட்சி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

தாயும், மகளும் நீண்ட நேரம் வாக்குவாதப் பட்டபின் மீனாட்சி மட்டும் மகனைத் தேடி தெருக்கள், கோவில்கள், பள்ளிக்கூடம், வீடுக்கள் என்று அலைந்தாள்.

நீண்ட நேரமாக அவனும் திரும்பாததைக் கண்டு வீட்டிலிருந்த கவிதாஞ்சலியும், குமணனும் பரபரப்படைந்தார்கள்.

"அக்கா, அண்ணையைத் — தேடிக்கொண்டுபோன அம்மா. இப்ப ரெண்டு பேரையும் காணேல. இருட்டப் போகுது. வா அக்கா. நாங்களும் தேடிப்பாப்பம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



நன்றி: மேர்சி

இருவரும் வசந்தனையும், தாயையும் தேடி அலையத்தொடங்கினார்கள்.

இருள் வந்துவிட்டது.

அவர்கள் போகாத வீடுகள் இல்லை. தேடாத தெருவில்லை. எங்கும் வசந்தனையும், மீனாட்சியையும் அவர்கள் இருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியாக களைத்துப் – போய் அவர்கள் வீடு திரும்பினார்கள். அங்கு மனாட்சி மட்டும் அழுதுகொண்டிருந்தாள்.

"அம்மா, ஒரிடமும் வசந்தனைக் காணேல. நீ எங்கால தேடிப் போனனி?".

"நான் சொன்னது சரியாப் போச்சடி. என்ரை பிள்ளையை பாழாய் போன இயக்கங்கள் கடத்திக்கொண்டு போட்டாங்கள். ஐயோ... கடவுளே என்ரை குஞ்சைக் காப்பாத்து" மீனாட்சி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

வெளியே இருந்து ஒரு குரல்!

"வீட்டுக்காறர்"

"வீட்டுக்காறர்"

"அம்மோய்.. ஆரோ படலையில நிண்டு கூப்பிடுயினம்"

"வசந்தன்ரை கூட்டாளியளாக்கும். கவிதை அந்த லாம்பைக் கொண்டுவாடி. போய் என்னெண்டு கேப்பம்"

www.tamilarangam.net

கவிதாஞ்சலியும், மீனுட்சியும் லாம்புடன் படலேக்கு வந்தார்கள்.

"ஆரது தம்பியவை? இருட்டில ஒருத்தரையும் தெரியேல" மீனுட்சி கேட்டுக்கொண்டே அவர்களே அவ்மித்தாள்.

"அது நாங்கள்தான். லாம்பை அங்கால வைச்சிட்டு வாருங்கோ" அதிகாரத்துடன் ஒருவர் கூறினுர்.

"ஆர் தம்பி? வசந்தன்ரை சிநேகிதர்மாரே?"

"நாங்கள் தமிழர். எல்லாருக்கும் பிறண்டுதான்" வந்தவர்களில் ஒருவர் சொல்ல, மற்றவர் தொடர்ந்தார்.

"இங்க பாருங்கோ. உங்கட மகன் வசந்தனே நாங்கள் நாட்டுக்காக உழைக்கச் சேர்த்துக்கொண்டுவிட்டோம். எல்லா வீடுகளிலயும் இப்படி ஒவ்வொருத்தரை நாங்கள் நாட்டுக்குழைக்க அழைக்கிறம். இப்ப உங்களுக்குத் தகவலேச் சொல்லிப் - போட்டுப் போகத்தான் தலைமை உத்தரவு. வேற மேற்கொண்டு எதுவும் சொல்ல முடியாது ஆனுல் நாங்கள் இப்ப சொன்ன விடயங்கள் ரகசியம். சத்தம் போட்டுக் குளறினுல் பின்விளேவுகளேப் பற்றி உங்களுக்கே தெரியும்."

மீனுட்சியின் பதிலே எதிர்பார்க்காதவர்களாய் வந்ததும் போனதும் தெரியாமலே அவர்கள் போய்விட்டார்கள்.

மீனுட்சி பேய் அறைந்த- மாதிரி சிலேயாக நின்ருள். அவளால் எதுவுமே பேச முடியவில்லே என்றில்லே. பேச முடியும் ஆனுல் பேச முடியாது. அதனுல் வந்தவர்கள் சென்ற வழியைப்- பார்த்து மனதுக்குள் ஒப்பாரி வைக்கத் தொடங்கிஞள்.

'ஐயோ என்ரை குஞ்சு என்ரை ராசா.. உன்னே வளக்க எப்பிடியெல்லாம் பாடுபட்டனடி. ஐயா செத்த பிறகு உங்களே வளக்கத்தானே நான் உயிரோட இருக்கிறன்... என்ரை ராசா நீ பள்ளிக்குடத்தால பசியோட வரப்போருய் எண்டடி அரிசி வேண்டி.. கீரை புடுங்கி சமைக்க... ஐயோ என்ரை தாயே.. என்ரை புள்ளையைக்- கடத்திக்கொண்டு போட்டாங்களே.

நானும் என்ரை குஞ்சுகளும் பசியால வாடேக்க எங்கட பட்டினிக்கு ஆர் உதவினவை இண்டைக்கு நாட்டுக்குழைக்கச் சேத்திட்டினமாம். ஆர் நாட்டுக்குழைக்கினம்? ஆளே ஆள் பழி வாங்க உன்னேப் பலிக்கடா- வாக்கிப் போட்டாங்களே'

மீனுட்சி அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியாமல் தலே சுற்றி நிலத்தில் வீழ்ந்தாள்.

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)
இச் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளேக் கொண்டே பெற்றுக்கொள்ள முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கனடாவிலிருந்து "தாயகம்" என்ற பத்திரிகை ஜோர்ஜ் என்பவரால் வாராவாரம் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

இலங்கையில் நடைபெறும் இயக்க அராஜகங்கள் பற்றிய செய்திகள் கூடுதலாக இப் பத்திரிகையில் இடம்பெறுகின்றன. இப் பத்திரிகையில் பிரசுரமாகும் கவிதைகள், ஏனைய ஆக்கங்கள் கூட இயக்கங்களின் பாசிச தன்மைகளைக் கண்டிப்பதாகவே அமைகின்றன.

அண்மையில் "தாயகம்" பத்திரிகையை விற்பனை செய்யும் நிலையங்களுக்குச் சென்று தங்களை எல்.ரி.ரி.ஈ ஆதரவாளர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டோர் தங்கள் அமைப்புக்கு எதிராக செய்தி வெளியிடுவதால், மேலிடத்திலிருந்து தங்களுக்கு வந்த உத்தரவையொட்டி "தாயகம்" பத்திரிகையை தாங்கள் தடைசெய்திருப்பதாகவும் இனிமேல் இப் பத்திரிகை விற்பனை செய்யக் கூடாதெனவும் மிரட்டியுள்ளனர்.

எனினும் ஒரு விற்பனை நிலையத்தைத் தவிர ஏனைய விற்பனை நிலையங்கள் தொடர்ந்தும் "தாயகம்" பத்திரிகையை விற்பனை செய்து வருகின்றன. இப்பத்திரிகை மீது எல்.ரி.ரி.ஈ ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தடைவிதிப்பின் பின் பத்திரிகை விற்பனை பெருமளவு அதிகரித்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இந் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக கைகலப்புச்சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது. இதுபற்றி எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள் தமக்கு எதுவும் தெரியாதெனவும், தமது ஆதரவாளர்கள் அடித்திருக்கலாம் எனவும் கூறுகின்றனர்.

தடைவிதிப்பின் பின் வெளியான "தாயகம்" பத்திரிகையில் "மக்களுக்கு எதிரான எந்த ஒரு அராஜகத்தையும் நாங்கள் மௌனமாக அங்கீகரிக்க முடியாது. மனிதனுக்கான அடிப்படை சுதந்திரங்கள் மதிக்கப்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப் பத்திரிகைத் தடை விதிப்புக்குச் சில வாரங்களுக்கு முன் "தேடல்" சஞ்சிகைக் குழுவினால் உருவாக்கப்பட்ட "தேடகம்" என்ற நூல்நிலையம் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டது.

இலங்கையில் அரசுக்கு எந்த வகையிலும் சளைக்காது துப்பாக்கி அதிகாரத்தால் கருத்துச் சுதந்திரத்தைப் பறித்திருக்கும் நிலைமையை வெளிநாடுகளிலும் ஏற்படுத்த சில கும்பல்கள் முனைகின்றன.

இலங்கையில் தங்களால் மேற்கொள்ளப்படும் அடாவடித்தனங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவை வெளிநாடுகளில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளால் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாத இக்கும்பல்கள் தடைவிதிப்பு, பயமுறுத்தல், கொலை மிரட்டல் எனத் தங்கள் பாணியில் வெளிநாடுகளிலும் தங்கள் அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்துவிட முனைகிறார்கள்.

இலங்கையில் ஆயுதங்களால் அடக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு ஆதரவாக அவர்களின் உணர்வுகளைத் தொடர்ந்து பிரதிபலிக்கவும், மறைக்கப்படும் உண்மைகளை வெளிக்கொணரவும், அராஜகங்களுக்கெதிராகக் குரல் கொடுக்கவும் வெளிநாடுகளில் வெளியாகும் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் முன்வருவதுடன் தங்களின் இம் முயற்சிக்கான பலத்தை கூட்டிக் கொள்ளவும், இம் முயற்சிகளுக்கெதிரான வன்முறை நடவடிக்கைகளை முறியடிக்கவும் தங்களுக்கிடையே இணைவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கனடாவிலிருந்து....**

**— நமது நிருபர்**



"இந்தியனுமியோட டெல்லிக்கு ஓடி வந்தாலும் இஞ்சயிருந்தே மாகாணசபையை இயக்குவோம் என்டு நாங்கள் விட்ட அறிக்கையை சனம் நம்புதில்லை"

— கிள்ளன்று.

www.tamilarangam.net

# துப்பாக்கிகள் பற்றி......

துப்பாக்கிகளைப் பார்த்திருப்பீர்கள்!
துப்பாக்கியை மட்டும்
ஒருவனிடம் கொடுத்து விட்டு
மனிதனாக இருப்பானென
நம்பியிருக்க முடியாது

துப்பாக்கிகளை வைத்திருக்கும் போது
முட்டாள் கூட அறிஞனாகி விடுகிறான்
பிரபஞ்சமே காலடியில்
மக்களெல்லாம்
புற்களை
அங்கொன்றும் இங்கொன்றும் கடித்து
கூட்டமாய் நின்று
தலையசைப்பது போல்
பிரமை

மொழியைக் கற்பதற்கு
சில மாதம், ஆண்டென
எப்படியும் ஒரு அவகாசம்
வேண்டியிருக்கும்.

துப்பாக்கியுடன்
தெருவில் இறங்கினால் போதும்
ஒரு மணி நேரமே அதிகமென்பேன்
துப்பாக்கி மொழியைக் கற்றுவிடலாம்

துப்பாக்கிகளுக்கு
சுட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.
சாத்தியமாயின்
ஒரு மனிதனை
மிருகத்தை குருவியையாவது
அதுவும் போனால்
ஒரு குரும்பட்டியையேனும்
சுடடேயாக வேண்டும்

துப்பாக்கி நண்பனே!
இவை பற்றியெல்லாம் உனக்கு
சிந்திப்பதற்கு
நேரம் அதிகமாயில்லை

உனது சிந்தனையெல்லாம்
காவலில் இருக்கும்
மனிதனை
எப்படிக் கொல்வதென்பதாக இருக்கும்

உனது அறிவுக் கெட்டியவரையில்
தலையில்;
வசதியாக இல்லாது போயின்
காது அல்லது நெற்றிப் பொட்டில்
துப்பாக்கிக் குண்டுகளைச் செலுத்தி
அவனைக் கொல்வதைப் பற்றி
சிந்தித்துக் கொண்டிருப்பாய்.

அதிகமாக இவன்
என்ன செய்திருக்க முடியும்?
ஜனநாயகத்தைப் பற்றி
அதிகமாகப் பேசியவனாய் இருக்கலாம்
அதிஷ்டம் கெட்டவன்
ஏதாவது கொலை கொள்ளையைப்
பார்த்துத் தொலைத்திருக்கலாம்.
அல்லதும் போனால்
எதற்காகவேனும் நியாயம் கேட்டிருப்பான்.

பதிலாக
நீ துப்பாக்கிக் குண்டுகளால்
கொன்றிருப்பாய்.
காலை
விடியும் போது
தெரிந்தவரையில்
சமூகவிரோதியாகவோ,
தேசத்துரோகியாகவோ
இவன்
இறந்து போயிருப்பான்.

www.tamilarangam.net

நண்ப!
இறுதியாக
துப்பாக்கிக் குண்டுகளால்
நீ
என்னையும் கொல்வதற்கு முன்பாக;
துப்பாக்கிகளை நம்பாதே!
துப்பாக்கிகளில் இருந்து
நீ தீர்க்கின்ற இரவைகள்;
புழுதியாய் கிடக்கும் நிலங்களில்
கவிதைகளாய் விளைகின்றன.

மறுபடியும் உண்டு!

துப்பாக்கிகளை
எப்போது வேண்டுமாயினும்
தேடிக் கொள்ளலாம்.
(தருவதற்கென்றே பலர் உள்ளனர்)


முன்பாக
கற்பதற்கும்
மக்களை நேசிக்கவும்
அதிகமாயே உள்ளது

நீ
துப்பாக்கிகளை மட்டுமல்ல
துப்பாக்கிகளைத் தந்த
எஜமானர்களையும்
நம்பாதே!

●

**செழியன்**

இக் கவிதை கனடாவிலிருந்து வெளியாகும் 'தாயகம்' பத்திரிகையிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது.


ounter-manoeuvred by the different liberation movements and state ... thus reasons, causes, get complicated in the ensuing medley. The peop... ... with their own speculation, rumours and gossip.

The Liberation Movements

# விடுதலை இயக்கங்கள்

இலங்கையில் வடக்கிலோ அன்றி தெற்கிலோ ஆயுதக் கிளர்ச்சியினை மேற்கொள்ளுபவர்கள் மக்களை முதன்மைப் படுத்தி தம் போராட்டத்தை நடத்தவில்லையென்பது தெளிவாகின்றது.

இவர்கள் பொதுமக்களை தமக்கு கவசமாகப் பாவித்து இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும்போது சில இராணுவத்தினர் கொலை செய்யப்படுவதுடன், இராணுவத்தினரது பழிவாங்கும் நடவடிக்கை மூலம் பெருமளவு பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

அரசு மக்கள் மீது பயங்கரவாதத்தை ஆயுதமாக உபயோகித்து வருவது பொதுமக்களிடையே பழக்கப்பட்டிருப்பதனால் இயக்கங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து ஓரளவு அனுதாபமும், சர்வதேச அளவில் சிறிய அங்கீகாரமும் கிடைக்கிறது.

இந் நடவடிக்கை குறுகிய நோக்கில் சக்தி வாய்ந்ததெனினும் அழிவுத்தன்மை கொண்டதெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னவே நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இது புரியும்போதும் புரிந்ததை வெளிப்படுத்தும் போதும் அவர்கள் தங்களது சொந்த இயக்கங்களினுலேயே பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றுர்கள்.

இத்தகைய ஒரு வன்முறை நடைபெறு முன்னர் மக்கள் பாதுகாப்புக் கருதி ஒரு கூட்டுப் பாதுகாப்பை ஒழுங்கு செய்யும் போது அதாவது சுற்றுடலில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்து வெளியேறச் செய்யும்போது பயமுறுத்தப்படுகின்றனர்.

## தமிழில்: கரன்

மக்களுக்கு வேறு மாற்று வழியின்மையால் இவர்களிடமிருந்து இயக்கங்களுக்கு ஓரளவு அனுதாபம் கிடைத்த போதும் இப்படியான நடவடிக்கைகளினுல் மக்களிடமிருந்து இவர்கள் தனிமை படுவதே இறுதிப் பலனுகிறது.

இதனுல் இயக்கங்களின் பழைய, நீண்டகால உறுப்பினர்கள் புதிய போராளிகளை சந்தேகத்திற்கிடமான முறையில் சேர்க்க முனைகிறுர்கள்.

பொதுமக்கள் பலியாக்கப்படுவதற்கு ஜூலை 29ம்திகதி இயக்கமொன்றினுல் நடத்தப்பட்ட மிகவருந்தத்தக்க சம்பவம் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

அதாவது, ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது, வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவம் தங்கியிருப்பதை எதிர்த்து ஊர்வலம் நடத்தும்படி ஜே.வி.பி.யினரால் அப்பாவிப் பொதுமக்கள் பலவந்தப்படுத்தப்பட்டனர்.

இதனுல் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்குப் பலியாகவேண்டியேற்பட்டது.

இதுபற்றி பாதுகாப்பமைச்சரிடம் சண்டே ரைம்ஸ் பத்திரிகை கேட்டபோது அவர் கூறியதாவது: "பொதுமக்கள் ஜே.வி.பி.யின் துப்பாக்கியை எதிர்த்திருக்க வேண்டும். ஜே.வி.பி.யினது துப்பாக்கிகளைவிட அரச இராணுவத்தினரது துப்பாக்கிகளுக்கு கூடுதலாகப் பயந்திருக்க வேண்டும்".

இதுவே அரச அணுகுமுறையும், இயக்கங்களது அணுகுமுறையுமாகும். இத்தகைய ஒரு சிக்கலான, இக்கட்டான பொறிக்குள், இந்த இரு பகுதியினருக்கும் மத்தியில் பொதுமக்கள் அகப்பட்டுள்ளனர்.

தற்போது அனைத்து இயக்கங்களும் பலவீனமடைந்து வருகின்றன. உயிர் மிகவும் மலிவானதாகிவிட்டது. நியாயங்கள் வலுவிழந்துள்ளன. பொறுமை குறைந்துவிட்டது. குடும்பங்கள் கூட மோசமாகப் பிளவுபட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சமூகத்தில் மரியாதைக்குரியவர்களை பொய் கூறியும், அவதூறு கூறியும் கொல்லும் அதே வேளை சாதாரண மக்கள் தன் புறுத்தலினதும், கொடுமையினதும் நிழலில் வாழ்கின்றனர். மனித வேள்விக் கிரியைகள் நடைபெறுகின்றன.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் மூன்றாவது அறிக்கையிலிருந்து ஒரு சிறு பகுதி நன்றியுடன் மறுபிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது.

# படைப்பும் நுகர்வும்

எழுதப்படும் இலக்கியங்களெல்லாம் வாசிக்கப்படுவதில்லை. ஆனால், அவை பலராலும் — வாசிக்கப்படுவதையே எழுத்தாளர்கள் விரும்புகிறார்கள்.

எழுத்தாளர்கள் இப்படி விரும்புவதற்குக் காரணங்கள்பல தங்கள் கதைகள் பலராலும் விரும்பப்பட்டால், தாம் எழுதிய புத்தகங்களின் விலை அதிகரிக்கும். விற்பனை அதிகரித்தால், தமக்கு இலாபம் உண்டாகும். செல்வம் சேரும் — இந்த வகையில் எண்ணும் எழுத்தாளர்களும் உண்டு.

இவர்கள் இலக்கியத்தை வியாபாரமாக — தொழிலாக — கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அதிகமாக இருப்பது மேற்கு நாடுகளில்.

நம்நாடுகளில் எழுத்துமூலம் இலாபம் சம்பாதித்துப் பணக்காரர் ஆனவர்கள் அதிகம் பேர் இல்லை. விரல்விட்டு எண்ணிவிடலாம், அப்படிப்பட்டவர்களை ஒருவேளை பரீட்சை வினாவிடைக் குறிப்புகள் தயாரித்து யாரேனும் சிறிது செல்வம் சேர்த்திருக்கலாம். அது தவிர, கதைகள் எழுதியோ, நாடகம் எழுதியோ

www.tamilarangam.net

செல்வம் சேர்த்தவர்கள் மிக மிகச் சிலரே.

எனவே, செல்வம் சேர்ப்பது தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகவே நமது எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். உண்மையை பச்சையாகச் சொல்லுவதானால் புகழ் தேடும் நோக்கமே இவற்றுள் பிரதானமானது.

புகழ் தேடும் நோக்கத்தை உடைய இந்த எழுத்தாளர்களை இருபெரும் பிரிவுகளுள் அடக்கலாம். எப்படியேனும் புகழ் கிட்டினால் சரி என்று நினைப்பவர்கள் ஒருவகை. தமக்கெனச்சில கோட்பாடுகளையும், இலட்சியங்களையும் மேற்கொண்டு அவ்விலட்சியங்களினின்றும் வழுவாத வகையிலே புகழ் தேட எண்ணுபவர்கள் மற்ற வகையினர்.

இவ்விரு சாராரும் புகழ் தேட விரும்புகின்றனர் என்பதில் ஐயமில்லை. புகழ் விரும்புதல்ஒரு குறைபாடும் ஆகாது. " புகழ் எனில் உயிரும் கொடுக்குவர் " என்று பழைய இலக்கியமும் பேசும்.

சரி. எழுத்தாளர்கள் புகழை விரும்புகின்றனர்! அது உண்மை.

இந்தப் புகழ் என்பதுதான் என்ன? அது எப்படிக் கிடைக்கிறது?

எழுத்தாளர் கதை எழுதுகிறார். இந்தக் கதைகள் அவருடைய சொந்த மேசை இழுப்பறைக்குள்ளே கிடக்கும் வரைக்கும் அந்த எழுத்தினாற் பயன் உண்டா? எழுத்தாளருக்குப் புகழ்உண்டாகுமா? இல்லை.

எழுத்தாளர் தாம் எழுதிய கதைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறார். அவை பத்திரிகைகளில் வருகின்றன. பலர் வாசிக்கிறார்கள். கதைகள் பிரபலமாகின்றன.

அதே கதைகளைப் புத்தகமாக அச்சடித்து வெளியிடுகிறார். பலர் விலை கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். புத்தகங்கள் கைமாறுகின்றன. மேலும்பலர் வாசிக்கிறார்கள். நூலகங்களும் -

## இ. முருகையன்

இப் புத்தகங்களை வாங்கி விநியோகிக்கின்றன. மேலும் பலப் பலர் வாசிக்கிறார்கள். எழுத்தாளருக்குப் புகழ் கிடைக்கிறது. அவருடைய கதைகள் மேலும் பிரபலமாகின்றன. வானொலிக்காரர்கள் அவரைப் பேட்டி காணுகிறார்கள். தொலைக்காட்சியிலும் அவர் தோன்றுகிறார். அவர் மேலும் பிரபலமாகிறார்.

புகழ் பரவும் நிகழ்முறை இது. இலக்கியங்கள் மக்களைச் சென்றடைவதற்கு இன்றுள்ள ஏற்பாடு இது. உலகெங்கும் உள்ள பொதுவான நடைமுறைதான்.

ஆனால்... இதுபோதுமா?

மக்களின் சுவைப்புத் திறன் எந்தநிலையில் உள்ளது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"என்னப்பா, முந்தநாள் விலையைவிட இன்டைக்கு மரக்கறிக்கு ரண்டு மடங்குவிலை சொல்லுறாய்?"

"நான் என்ன செய்யிறது? தோட்டத்தில் முளைக்கிற எல்லாப் பயிருக்கும் இயக்கம் வரி வேண்டுது. எனக்கும் குடும்பம், குழந்தை, குட்டி இருக்குது. இப்பிடி வரியைக்கட்டிப் போட்டு நாங்கள் எப்பிடிச் சீவிக்கிறது? அதுதான் இந்தவிலை"

புத்தக வெளியீட்டுத்தொழிலும், விநியோகத் தொழிலும் திருப்திகரமாக உள்ளனவா?

மக்களிடையே இலக்கியத்தைக் கொண்டு செல்வதற்கு இன்னும் சிறந்த வழிகளை நாம் தேடிக் காண முடியாதா? இவை எல்லாம் நம் கவனத்துக்கு உள்ளாக வேண்டிய கேள்விகள்.

இன்று 'தமிழ் கூறும் நல்லுலகில்' வெளிவரும் புத்தகங்கள் இருவகைப்படும். சனரஞ்சகமான புத்தகங்கள் எனப்படுவன ஒருவகை. இவை அநேகமாக மரும நாவலாக உள்ளன. நள்ளிரவிலே தொலைபேசியிற் பேசிவிட்டு, டுமீல் டுமீல் என்று துப்பாக்கி வேட்டுகள் கேட்க இருளில் மறையும் முகமூடி உருவங்களும், இரகசியமாக எச்சரிக்கை

செய்யும் அசரீரிகளும், நடுக்காட்டில் வீரிட்டலறும் பெண் குரல்களும்... இத்தியாதி சங்கதிகளைக் கொண்டவை, இந்த மரும நாவல்கள். அந்தக் காலத்திலே ஆரணி குப்புசாமி முதலியாரும், வடுவூர் துரைசாமி அய்யங்காரும், வை.மு. கோதைநாயகி அம்மாளும் செய்து வெளியிட்ட மரும நாவல்களின் பாணியிலிருந்து அதிகம் விலகிச் செல்லாதவைதான் இன்று புத்துயிர் பெற்று வரும் சனரஞ்சகக் கதைகளும். இந்தக் கதைகள் பல்லாயிரம் பிரதிகள் அச்சாகி விற்பனையாகின்றனவாம். அந்த வகையிலே, உண்மையான மக்கள் எழுத்தாளர்கள் மேற்படி நாவல்களை எழுதுவோரே என்றும் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

மற்றொரு புறத்தில்.... வேறு சில புத்தகங்கள் இலக்கியத் தரமுள்ளவை என்று பேசப்படுகின்றன. 'பல காரணிகள் – தொற்றி எழுதப்படும் இவை; எக்கலிப்பனவாகவும், வியாபிப்பனவாகவும் பிரகடனங்கள் பலவற்றை வீரிய வித்தாக்கி அபூர்வமான கதாசம்பவ விந்துகளை உடையனவாக' அருளப்படுகின்றன. இல்லையேல் 'என்னுள் நானுன நானின் நான்மை பற்றியும்

www.tamilarangam.net

உன்னுள் நீயான நீமை பற்றியும் காரண, காரிய சேத னைக ளை உதரணிப்பவையாக' இயற்றப்ப டுகின்றன. தமிழ்நாட்டில் மௌனி பா. ச. ராமாமிருதம் போன் றோரும், ஈழத்தில் எஸ். அகஸ்திய ர், எஸ். பொன்னுத்துரை போன் றோரும் எழுதி வழங்கும் இவ்வா க்கங்கள் பொது வாசக னைத் திக்குமுக்காட வைப்பதையும் ஒரு பிரதான குறிக்கோளாகக் - கொண்டுள்ளனவோ என்று ஐயுற வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட க தைகள் மக்கள் மன்றத்தில் அதி கம் செல்லுபடியாவதில்லை என் பது சனரஞ்சகப் பிரசுரகர்த்த ர்களின் முறைப்பாடாகும்.

மேலோட்டமாகப் பார் ப்பவர்களுக்கு, இந்த நிலைமையி ல் ஒரு முரண்பாடு இருப்பது போலத் தோன்றும். தரமான (தமது) கதைக ளை மக்கள் விரு ம்புவதில்லை என்று இலக்கியகா ரர்களான மேன்மக்கள் கூறுகிறா ர்கள். பொது மக்களின் இரச னை பழுதுபட்டுள்ளது என அவர் கள் வாதிப்பர்.

மர்ம நாவற்காரர்களின் வாதமோ வேறு விதமானது. பொதுமக்கள் விரும்பி வாசிக்கு ம்படி எழுதும் வல்லமை தமக் கேயுண்டு. ஆகையால் தம் நாவ ல்களே தரத்தில் உயர்ந்தவை என்பர். தரத்தில் உயர்ந்தவை- யென சாதிப்பதற்கு நாணினாலும் அவையே வெற்றிகரமானவையெ ன்று பெருமைப்படுவர். உரிமை கொண்டாடுவர்.

இப்படிப் பார்க்கும்போ தும் இலக்கியத் தரமும், மக்கள் இரசனையும் எதிரெதிர்த் துருவ ங்களில் உள்ளன என்ற எண்ணம் உண்டாகிறது. இவை இரண்டும் சந்திக்க முடியாதவை என்று நினைக்கத் தோன்றுகிறது.

இதில் உண்மை உண்டா? சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டி ய கேள்வி இது.

மக்கள் இலக்கியம் எப்ப டிப் பட்டது? அது மக்கள் விரும் புமாறு - மக்க ளைக் கவரத் தக்க பண்புகளுடன் - மிளிரவே ண்டியது முக்கியம். மக்க ளைச் - சென்றடையக் கூடியவாறு அது விளங்க வேண்டியது மிகமிக முக் கியம்.

ஆனால்... இன்றைய பிற் போக்குக் கும்பலின் சீரழிவுப் போதை எழுத்துகளில் மூழ்கி தி ளைத்திருக்கும் பழுதுபட்ட இர ச னைக்குத் தீனி போடுவனவாக மக்கள் இலக்கியம் இருக்காது.

சீரழிவுப் போதை எழுத் தாளர்கள் மக்களின் இரச னை- யைப் பழுதுபடுத்தி, மந்தப்படுத் தி வைக்கவே முயல்கிறார்கள். அ ந்த மந்திப்பிலும், தேக்க நிலை மையிலும் சந்தை ஆராய்ச்சி ந டாத்தி, எரிகிற வீட்டில் இலாப ம் பிடுங்குவதற்கு முந்துகிறார்கள்

இங்கு, முற்போக்கான இ லக்கியகாரனுக்கு இரண்டு பணி கள் உண்டு. முதலாவது பணி சீரி ய - செழுமையான - உயரிய - தரமுள்ள - உண்மையான இ லக்கியத்தைப் படைப்பது. இரண் டாவது பணி, இச் சீரிய இலக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யத்தை மக்கள் விரும்பும் வகையில், அவர்களுடைய இரசனையை பக்குவப்படுத்தி எடுப்பது. இப்பணிகள் இரண்டும் ஈடுசோடாக இணைந்தே செல்லுதல் வேண்டும். இரசனையைப் பண்படுத்துதல் என்னும்போது, இக் கணத்திலுள்ள நிதரிசன நிலைமையே ஆரம்பப் புள்ளியாய் இருக்கவேண்டி உள்ளது. அந்த வகையில் இன்றைய வாசக இரசனை பற்றிய உண்மையான கணிப்பீடும், அதனைப் புறக்கணிக்காது கணக்கிலெடுத்து கொள்ள வேண்டிய கடப்பாடும் நமக்கு உண்டு. அத்தகைய கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நமது பிரசுர முயற்சிகளும் புத்தக விநியோக முயற்சிகளும் நடைபெறுதல் நன்று.

பிரசுர முயற்சிகளைப் பற்றி எண்ணும்போது ஒரு காலத்திலே பெரும் பயனுள்ள பணிகளைச் செய்துவிட்டு, பின்னர் பல காரணங்களாலே செயல் அற்று போய்விட்ட, அல்லது செயல் அடங்கிக் கிடக்கும் நிறுவனங்கள் பல நினைவுக்கு வராமற் போகமாட்டா. சக்தி காரியாலயம் மேற்கொண்ட புத்தக வெளியீட்டு முயற்சிகளும், சஞ்சிகை வெளியீட்டு முயற்சிகளும் கொஞ்சமல்லவே! குமரி மலர் வெளியீடுகளில் வந்த கட்டுரைகளும், காவியங்களும் நினைவுகூரத் தக்கன.

வர்த்தகப் பிரசுர அலைகளினின்றும் ஒதுங்கித் தனித்து நின்று தம்மளவிலே பணிபுரிய எண்ணிய சிற்றேடுகளும் நினைவுக்கு வரும். இவற்றுள் சி. சு. செல்லப்பா நடத்திய 'எழுத்து' தாக்கமான பலாபலன்கள் சிலவற்றுக்குக் காரணமாயிற்று. கசடதபற, வானம்பாடி, கணையாழி, செம்மலர், தாமரை முதலான தமிழகத்து ஏடுகளும், அலை, நதி, அக்னி, நோக்கு, மல்லிகை முதலான ஈழத்து ஏடுகளும் ஞாபகத்துக்கு வராமற் போகா. இவ்வாறான சிற்றேடுகள் பொருளியல் இடுக்கண்களுக்கு இடையறாது முகங்கொடுத்து எதிர் நீச்சல் போடுவன என்பது பலரும் அறிந்த உண்மை.

(தொடர்ச்சி அடுத்த களத்தில்)



"முதல் ரைப் பண்ணின வெற்றர் மாதிரி தானே இதுவும் இருக்கு. திருப்பியும் இந்த வெற்றரை அதே ஆளுக்கு அனுப்பச் சொல்லுறியள். மறந்துபோய் திருப்பித் தாறியளோ?"

"நான் மறக்கேல. வடிவாய் பார் அதே வெற்றர் தானேவெண்டு. இதில 'நட்புறவு' என்டொரு சொல்லு கூடச் சேத்திருக்கிறதைக் கவனிக்கேலயே?"

— சின்னண்ணா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.


கலம் : 26 பெப்ரவரி 1990

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்



முகவரி ............. *THOONDIL*
*SÜDASIEN BÜRO*
*Grosse Heimstr 58*
*4600 Dortmund 1*
*West Germany*

தொலைபேசி இல. .... (0231) 136633


## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மனி: 6 மாதங்கள் – 20,– டி.எம்
1 வருடம் – 38,– டி.எம்
சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் – 25,– டி.எம்
1 வருடம் – 48,– டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் – 45,– யு.எஸ்.டொலர்
சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபாற் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

பல நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் இலக்கிய, அரசியற் சஞ்சிகைகளோடு ஒப்பிடும்போது மிகவும் தரமானதாக இருக்கிறது தூண்டில். சரியான கருத்துக்களை சரியான நேரத்தில் எடுத்துச்- சொல்லவேண்டியதே ஒரு தரமான பத்திரிகையின் செயற்பாடு. அந்தவகையில் ராஜினி திரணகம கொலை செய்யப்பட்டதை கண்டித்தது பொருத்தமானதாக இருந்தாலும், இன்னும் விளக்கமாக கொலை செய்தவர்களைப் பற்றியும் எழுதியிருந்தால் அதற்கான தாக்கம் அதிகமானதாகவேயிருந்திருக்கும்.

– திரு, திருமதி பாஸ்கர்

'முன்பு சனங்கள் பாதையில் நடமாடினார்கள். இப்போது அநேகமாகப் பெண்களும் வயோதிபர்களுமே தெரிந்தார்கள்' என்ற வரிகளில் 'சனங்கள்' என்ற சொல் எவ்வாறு அர்த்தம் பெறுகின்றது? இப் பந்தி ஓர் கவித்துவ உணர்வுடன் 'கனவை மிதித்தவனில்' எழுதப்பட்டிருக்கிறது. இதைவிட இன்றைய நிலையில் – 'சனங்கள்' என்ற சொல்லை அதற்குரிய முழு அர்த்தத்தில் எப்படி வெளிப்படுத்தலாமோ – தெரியவில்லை.

இப் பந்திக்கு இயந்திர ரீதியான அர்த்தத்தைக் கொடுத்து அதைத் 'தவறாக' நமது விமர்சனத்தில் 'மொழிபெயர்த்தமைக்காக' எனது கண்டனத்தைத்தெரிவிக்கிறேன். ஒவ்வொருவரும் தமக்குத்தாமே அதாவது எனக்கு நானே பயப்படுகின்ற அல்லது பயப்படவேண்டிய சூழலின் பாதிப்பே இதைத் தவறு என்று கருதுவதற்கு எம்மை இட்டுச்செல்கின்றதோ என்னவோ?

– சுகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்